1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 26-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு ஆடி மாதம் 5-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10

## அவர் வந்திருக்கிறார்

வண. அருள் குழந்தைசாமி, S. J.

கடற்கரை. ஒருசிறியகுடிசை. கனேனயநாட்டு ஏழைப்பெண். அவளுக்கு ஒருபெண். இவள் அவளுக்கு ஒருபெரிய பாரமாய் இருந்தாள். காரணம், பைத்தியம் பிடித்திருந்ததால். பேய் பிடித்திருந்ததால். அச்சிறுமி திடீரென்று மிரளுவாள். வாரிச் சுருட்டி எழும்புவாள். பயங்கரமாகச் சிரிப்பாள். ஆச்சரியபெலம்கொள்வாள். பாவம்! தாய் துன்புற்றாள். மருந்திலும் மாயத்திலும் பணத்தைச் செலவிட்டுப் பார்த்தாள். மகள் குணமடையவில்லை. பணம விரையமானது.

அங்கே யூதர்கள்மத்தியில் ஒருவர்தோன்றியிருக்கிறார், பிரமாதமான காரியங்களையெல்லாம் சாதிக்கிறார்; பிடிக்கும் பேய்களை ஓட்டுகிறார், மிகவும் வல்லபர், வெகுநல்லவர்என்று ஊரேபேச்சு. இந்தத்தாய் தான் யூதப்பெண் இல்லாவிடினும், மகளின்நிலைமையை நினைந்து அவரை அண்டிச்செல்ல ஆசித்தாள். 'நான் அவருடையசாதியில்லையே; அவர் என்னைப்புறக்கணித்தால்? இல்லை. அந்த மனுஷன் மிகவும்நல்லவராமே! ஆனல், அவர் ஒருஊரில் தங்கமாட்டாராமே! அவர் எங்கு இருப்பாரோ?

ஒருநாள் அவள்குடிசைக்கு முன் ஒருகலவரம். அவளுடைய யூதச்சிநேகிதிகள் "அவர் நமது ஊருக்கு வந்திருக்கிறார், ஏன் போய்ப்பார்க்கக்கூடாது" என்றார்கள். சந்தர்ப்பத்தை நெகிழவிடச் சமயமில்லை. இதோ! கனேனய நாட்டுப்பெண் செல்கிறாள். தெருக்களில் வருகிறவர்கள் போகிறவர்களிடமெல்லாம் அவர்எங்கேயென்று விசாரிக்கிறாள். கடைசியாக வீட்டைக் கண்டுபிடித்தாள். உள்ளே சென்றாள். "அசுத்த அரூபி பிடித்திருந்த குமாரத்தியையுடைய ஒருஸ்திரீ அவரைப்பற்றிக் கேள்விப்பட்டவுடனே உள்ளேவந்து, அவர்பாதத்தில் விழுந்தாள். அந்தஸ்திரீ சிரோப்பெனிசியாவில் பிறந்தவளும், அஞ்ஞானியுமாய் இருந்தாள். (மாற்கு 7-25) பன்னிருவர்நடுவில் ஒருவர். அருளும், அன்பும், அனுதாபமும் வழிந்தோடும்முகம். இரக்கம்சுரக்கும் இருதயம. இருதயஇரகசியத்தையும் ஊடுருவக்கூடியகண்கள். இவர்யார்? இவர்தான் அவர். யேசு. 'அவள் அவரைப்பார்த்தாள். தனசாதியை மறந்தாள், தன்மதத்தை மறந்தாள். தன்னையேமறந்தாள். அவர்பாதத்தில்விழுந்தாள். வார்த்தைகள் தானய்ப்புறப்பட்டன. "ஆண்டவரே! தாவீதின் 'குமாரனே, என்பேரில்இரக்கமாயிரும். என் குமாரத்தி பசாசினல் கடினமாய் உபாதிக்கப்படுகிறாள்."

அவர்அவளைநோக்கினர். அன்பேஅவர். அவரேஅன்பு. தம காலடியில்ஒருசீவன். ஒருபெண். ஒருஎளியபெண். பேய்பிடித்த மகளை வைத்துக்கொண்டு பரிதபிக்கும் ஒருதாய். இக்காட்சியைக்கண்ட அவர் இருதயம் இளகாமல்இருக்குமா? 'எழுந்து போ! உன்மகள் குணமடைந்தாள்' எனச் சொல்லுவார்என்று எதிர்பார்த்தார்கள் சீஷர்கள். ஆனல் இதுஎன்ன! இவர் தானு அவர்? "அவர்அவளுக்குப் பதில்மொழியாக ஒருவார்த்தையும் சொல்லவில்லை." என்ன கடினமனது. என்ன அனுதாபமற்றவிதம்! குணப்படுத்தாவிட்டாலும், நல்லவார்த்தை ஒன்றுகிடையாதா? ஒப்பு உபசாரத்துக்காகிலும் ஒருவார்த்தை சொல்லவேண்டாமாஎன்று மனம்நொந்து அவள் அந்த இடத்தைவிட்டு உடனே தன் வீடு சென்றாளா? இல்லை.

அவள்தைரியத்தைவிடவில்லை. நம்பிக்கையை இழக்கவில்லை. அவர்சென்றார். அவளும்சென்றாள். அழுதுகொண்டு, அவரைக்கூப்பிட்டுக்கொண்டு சென்றாள். அடிபட்ட குழந்தை அடித்தஅன்னையை அணுகிச் செல்வதுபோல் சென்றாள். அவர் அவளைக்கவனிக்கவில்லை. சீஷர்களுக்குக் கோபம்வந்தது. சொல்லிப்பார்த்தார்கள். இவள் நிறுத்தவில்லை. துரத்திப்பார்த்தார்கள். அவள்நிற்கவில்லை. அவர்களால் முடியவில்லை. மிகவும்பிடிவாதக்காரியாய்த்தோன்றினள். ஊழியர்கள் அவரை நோக்கி: "இந்தஸ்திரீ நமது பிறகே கூப்பிட்டுக்கொண்டு வருகிறாளே, தேவரீர் அவளை அனுப்பிவிடுமென்று மன்றாடினர்கள்."

(தொடரும்)

## தாய் செய்த தியாகம்

ஸ்கொட்லாந்துதேசம். கடற்கரையோரம் ஓர்சிறியகுடிசை. அதில் ஓர் ஏழைக் குடும்பம் வாழ்ந்துவந்தது. அதில் ஓர் தாயும், தகப்பனும், பதினெட்டு வயது முற்றும முடியாத ஓர் இளம்வாலிபனும் வாழ்ந்துவந்தனர். அவர்கள்தொழில் மீன் பிடிப்பதே. அவர்களின்வாழ்க்கை கடலில்தோன்றிமறையும் அலையைப்போன்றிருந்தது. தினமும்கடலில் தகப்பனும் மகனும் தங்கள்படகில் சென்று, அகன்ற பெரியகடலில் தங்களது சிறியவலையைவீசி, அந்த வலையில்சிக்கிய சொற்பமீனைப் பிடித்துத் தங்கள்வாழ்க்கையை நடத்திவந்தனர்.

வழக்கம்போல் தகப்பனும் மகனும் மீன்பிடிக்கச் சென்றனர். வழக்கத்திற்கு மாருக அன்றுவரவேண்டிய நேரத்திற்குள் அவர்கள்வீடுவந்து சேரவில்லை. தாய்தயங்கினுள், தன் கணவனையும்,மகனையும்காணுது அழுது சோர்ந்தாள். நீலக்கடலைநோக்கினள். வானத்தை அண்ணுந்து பார்த்தாள். பயங்கரத்தொனியில்கத்தினள். காரணம்என்ன? ஓர்சிறிதளவு வெளிச்சத்தைக் கொடுக்கும் நிலவையும் அன்று காணவில்லை. காரிருளாகிய மேகம் மறைத்துக்கொண்டது. மறுமுறையும் அழுதாள். அவள் கணவனும்மகனும் வீடுஇருக்கும் திசைதெரியாமல் தயங்கிக் கொண்டிருப்பார்கள் என்று உணர்ந்தாள். வீட்டிற்குச் சென்று வெகுதூரத்திலிருப்பவர்களின் கண்களுக்குத் தென்படக்கூடிய வெளிச்சத்தைக் கொடுக்கக்கூடுமான எண்ணெய் இருக்கிறதாஎன்று பார்த்தாள். விளக்குக்கே எண்ணெய் இல்லாத அவளிடம் எப்படிஅதை எதிர்பார்க்கமுடியும்? திகைத்தாள்.

மறுநிமிடம் அவள் முகம் மலர்ந்தது. காரணம் தனக்குச்சொந்தமான ஓர்பொருள் தன்னிடம் உண்டு என்பதே. அதுதான் ஓலைகளினல்நெய்யப்பட்ட ஓர்குடிசை. தன் கணவனையும் மகனையும்மீட்க, தனக்குச் செல்வமாகவுள்ள குடிசையைத் தீக்கிரையாக்கினள். அந்தஏழையின்குடிசைபிரகாசமாகச்சொலித்தது. படகில் வழிதெரியாமல் திகைத்துநின்ற தகப்பனும் மகனும் பிரகாசமான வெளிச்சத்தைநோக்கித் தங்கள்படகை விரைந்துசெல்ல விட்டனர். தாய் தன்உறைவிடமான செல்வத்தை இழந்தாலும் தன்மகனையும், கணவனையும்கண்டு ஆனந்தித்தாள்.

இவளைக்காட்டிலும் மாபெருந் தியாகம்புரிந்த மற்றொருதாய் இருக்கிறாள். அவள்தான் மரியாள். பாவிமக்களாகிய நாம் பாவமென்னும் இருளானகடலில் செல்வதைப்பார்த்துஎன்ன செய்கிறாள்? தான்பத்துமாதஞ் சுமந்துபெற்ற தனதுஏகசெல்வமாகிய யேசுவைப் பலியாக ஒப்புக்கொடுக்கிறாள். தன்தேசத்தார்களாகிய யூதர்கள் அவரைக் கொலைசெய்யும்போதும் தயங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். தனதுசெல்வமாகிய யேசு மரித்தாலும் கோடிக்கணக்கான உயிர்கள் இரக்ஷணியம் அடையும்என்று மகிழ்ந்து அவரைக் கல்வாரிமலையில் பலியிட்டாள்.

யேசுநாதர் அருளப்பரைப் பார்த்துக் கூறியதென்ன? "இதோ உன் தாய்." தேவ தாயைப்பார்த்துக் கூறியவார்த்தைஎன்ன?"இதோஉன்மகன்" அன்றுமுதல் நம்தேவஅன்னை நமதுதாயானள். அவள்நம்மை ஆபத்திலிருந்து மீட்பதிலேயே —நம்மை நல்வழியில் சேர்ப்பதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருந்துவருகிறாள். சலேத், லூர்து, போன்மேன், பெல்வாசன், பாத்திமா முதலியவிடங்களில் வெவ்வேறுகாலங்களில் காட்சியளித்து நம்மை நல்வழியில்திருப்ப முயன்றுவருகிறாள். அவளே நமதுதஞ்சம். அவளே நமது ஏகநம்பிக்கை. உலகத்திற்கு சமாதானம்வேண்டுமெனில் அவ்வன்னை காட்டும் வழியைப் பின்பற்றவேண்டும். உலகம்உய்வதற்கு வேறுவழி ஒன்றுமில்லை. அவள்பாத்திமாவில் அளித்தகாட்சிகளிலே வேறெந்தக்காட்சிகளிலும் பேசியதைவிட மிகத்தெளிவாகப் பேசி, நாம்செய்யவேண்டியது இன்னதெனக் காட்டிவிட்டாள். நமதுஅன்னையின்பொன்மொழிகளின்படிநடந்து, தேவகோபத்தை அமர்த்துவோம்.

(ச-வி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

## பத்திநாதர் ஜேர்மனியரா ?

முத். பத்தாம்பத்திநாத பாப்பானவர் சாதியிலே ஓர் ஜேர்மனியரென்று ஜேர்மனியிலே காள்ஸ்றூநகரில் பிரசுரமாகும் "கொன்ரூட்ஸ்பிளாற்" எனும் மேற்றிராசன பத்திரிகை உரிமைபாராட்டுகின்றது. அவர் அங்கே ஊட்ரெம்பேர்க் மாகாணத்தைச்சேர்ந்த மூன்டர்கின்ஜென்னுமிடத்திலிருந்து இத்தாலிய றீயெஸிஎனும் கிராமத்திற்போய்க் குடியேறிய சித்திரமெழுதுவோரான சினெய்டர் என்பவரின் பௌத்திரர் என்றும், இவர் பாட்டனூரான சினெய்டர் அதாவது ரெய்லர் என அர்த்தங்கொள்வதான தனது பெயரைச் சார்த்தோ என்று அப்போது மாற்றிக்கொண்டாரென்றும் அப்பத்திரிகை கூறுகின்றது. முத். பத்தாம் பத்திநாதரும் அப்போது ஆஸ்திரிய சக்கிராதிபத்தியத்தின் ஓர் பகுதியாயிருந்த றீயெஸியில்தான் பிறந்தார்.

## திருமேனிப் புதியஅங்கி

முத். பத்தாம் பத்திநாதரின் திருமேனியானது பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசராலே அப்போது— 1945-ம் ஆண்டு ஆனிமாதம் அத்திருமேனி அவருடையதுதானென ஒப்புக்கொள்ளும் திருவைபவத்தின் போது—அருளப்பெற்ற நீண்ட அங்கி தரிக்கப்பட்டிருந்து, பின்னர் தற்போது அதனிடமாகப் புதியதாய்ச்செய்த வெண்மையானநெட்டங்கிஒன்று அணியப்பெற்று, அதன்மேலாக ஓர்செந்நிறக் கழுத்துப்பட்டியும், சித்திரத் தையல்வேலைப்பாடமைந்த செந்நிற ஸ்ரோல் ஒன்றும் இருக்கின்றன. இப்புதிய நெட்டங்கி பத்தாம் பத்திநாதரது தையற்காரனின் புதல்வரான குக்கிளியெல்போ பர்லொம்பி என்பவரால் செய்யப்பட்டது. இது செய்யப்படும்போது அதனைத்தொடுவதற்கென்றுஅநேக சனங்கள் சென்றூர்கள். அதில் வைத்துத் தைக்கப்படவேண்டிய பொத்தான்களையெல்லாம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் பரமண்டல — பிரியாதத்த மந்திரங்கள் சொல்லிக்கொண்டு தைக்கத் தன்னை அனுமதிக்குமாறு ஓர் பெண்மணி கேட்டுக்கொண்டாள். பத்தாம் பத்திநாதரின் திருமேனி நல்லசேமமான நிலைமையில் இருந்துவருகிறது.

## புத்ததலைவர்களின் முயற்சி

யப்பானிய ஹிரோஷிமாநகரிலே அணுக்குண்டு வீசப்பட்டபோது அழிவுக்குள்ளான மோட்சாரோபணமாதா கோவிலைத் திரும்பக்கட்டியெழுப்புதற்கென அங்கு ரோக்கியோநகரில் ஆக்கப்பட்டிருக்கும் கம்மிற்றியில் புத்தர்களும், ஷின்ரோயிஸ்தரும் முதன்மைவகித்திருக்கின்றனர். "திவ்வியநற்கருணை முன்பாக நித்தியசெபங்கள் நடைபெறுவதையே தனது லட்சியமாகக் கொண்டுள்ள ஓர் திட்டத்திலே கிறீஸ்தவர்கள் அல்லாதோரும்ஒத்துழைக்கக்காண்பது பெரிதும் ஆச்சரியந்தருவதாகும்" என்று விசுவாசப்பரப்புதற்சபையின் அமெரிக்கஐக்கிய தேசியதலைவரான மொஞ். புலரன் ஷீன் ஆண்டவர் கூறுகின்றூர். இந்தக்கோவில் கட்டப்படவேண்டுமென்றும், இரண்டாவது உலகயுத்தத்தில் ஈடுபட்ட சகல இராச்சியங்களினதும்கொடிகள் அதன் பலிபீடத்தில் நிறுத்திவைக்கப்படவேண்டுமென்றும் மனுப்பண்ணுவதற்காகச் சென்றவருடம் அங்குள்ள புத்தசமயத்தவர்களான வர்த்தக–கைத்தொழிற் தலைவர்கள் கத்தோலிக்க மிஷனரிமாரை முந்தமுந்த அண்டிப்போனூர்கள். இந்தக்கம்மிற்றியில் ஒரேயொரு கத்தோலிக்கரே இருக்கின்றூர். யப்பானிய ஹிரோஹிற்றோ சக்கிரவர்த்தியின் சகோதரரான ரகாமற்சூ இளவரசரும், பிரதமரான ஷிஜேறு யோஷிடா அவர்களும், அந்த ஒரேயொரு கத்தோலிக்கரான சுப்பிறீங்கோட்டுப் பிரதமநீதியரசர் டக்றர் கொட்ராரோ ரனகா அவர்களும், மற்றும் பிரபல வர்த்தக – கைத்தொழில் முதலாளிமார்களும், சோட்ரோ, ஷிங்கொன் என்ற புத்தசமய பிரிவுகளைச்சேர்ந்த பிரதான புத்தமடாதிபர்களும் அதில் அங்கத்துவம் வகித்திருக்கின்றூர்கள்.

## யப்பானிய டக்றர்மார்

யப்பானிய கத்தோலிக்க டக்றர்மாரின் தேசிய ஐக்கியசங்கம் ஒன்றை நிறுவுதற்கென்று சமீபத்தில் ரோக்கியோநகர சோபியா சர்வகலாசாலையில் நிகழ்ந்த கூட்டத்திலே யப்பானின் சகல பகுதிகளிலிருந்தும் 130 பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தார்கள். இச்சங்கம் நானூறு அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. இதன் முதற்தலைவர், ரோக்கியோ நகரிலுள்ள சர்வதேச கத்தோலிக்க ஆஸ்பத்திரியின் பிரதம சத்திரவைத்தியரான டக்றர் யோசெவ் கஜேயமா அவர்கள். அக்கூட்டத்திலே யப்பானிலே பாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானபதியாய் இருந்துவருகின்ற டே பேர்ஸ்ரென்பேர்க் ஆண்டவர் பேசியபோது, யப்பானின் ஆன்ம, சரீர புனருத்தாரணஅமைப்பிலே கத்தோலிக்க டக்றர்மார் எடுத்துக்கொள்ள வேண்டியபங்கைத் தெளிவாக எடுத்துக்காட்டினின்றூர்.

## கிறீஸ்துவேதத்தின் ஆபரணம்

"கிறீஸ்துவேதத்தின் ஓர் ஆபரணம்" என்று காலஞ்சென்ற பதினொராம் பத்திநாத பாப்பானவராலே வர்ணிக்கப்பெற்றதும், இற்றைக்கு 40 வருடங்களின்முன் தான் அடியிடப்பட்டபோது 200 கத்தோலிக்கரையே உடையதாயிருந்து தற்போது 2,50,000 கத்தோலிக்கரைக் கொண்டிருப்பதுமான ஷயர்விக்காரியம் ஆபிரிக்காவிலே நையஸலாந்து நாட்டின் அரைவாசியைத் தெற்குப்புறமாக அடக்கியுள்ளது. இந்தவிக்காரியத்திலுள்ள சனங்களில் நான்குபேருக்கு ஒருவர் வீதம் இப்போது கத்தோலிக்கராக இருக்கின்றனர். அதிலே வருடம்ஒன்றுக்கு அவர்கள்தொகை சராசரியாகப் 15,000 பேர்வீதம் அதிகரித்துவருகின்றது. தனது சொந்தச் சுதேசகுருமாருடன் ஐரோப்பிய குருமாரையும், தங்கள்குருத்துவ கல்வியை முடிக்கின்ற 25 குருத்துவ மாணவர்களையும் அது கொண்டிருக்கின்றது.

---

இஸ்பிரீ. ஆக. பின்வரும்

## 8-ம் ஞாயிறு

சுவிசேஷ வாசிப்பு

( லூக். 16 : 1—9)

அக்காலத்தில்யேசுநாதர் தம்முடையசீஷர்களுக்குக் கூறினதாவது: ஐசுவரியவானுன ஓர் மனிதனுக்கு ஓர் காரியஸ்தன் இருந்தான். அவன்தன் எசமானுடையஆஸ்திகளை அழித்ததாக எசமானிடத்தில் அவனைப்பற்றி அவதூறு சொல்லப்பட்டது. எசமான் அவனைஅழைத்து: உன்னைப்பற்றி நான் இப்படிக் கேள்விப்படுகிறதென்ன? உன் விசாரணைக்கணக்கை யொப்பி. ஏனெனில், இனிமேல்நீ காரியஸ்தனுயிருக்கக்கூடாது என்று சொன்னுன். காரியஸ்தனே தனக்குள்ளே சொல்லிக்கொண்டதாவது: என்எசமான் என்னைக்காரியஸ்தன் உத்தியோகத்தினின்று நீக்கிவிட்டால் நான் என்னசெய்வேன்? பூமியைக் கொத்த எனக்குச் சக்தியில்லை; பிச்சையெடுக்க வெட்கமாயிருக்கிறது. ஆதலால், நான் காரியஸ்தன்உத்தியோகத்தினின்று நீக்கப்படும்போது சிலர் என்னைத் தங்கள்வீடுகளில் ஏற்றுக்கொள்ளும்படி என்ன செய்வதென்பதை நான் அறிவேன் என்று சொல்லிக்கொண்டான். ஆகையால், தன்எசமானுடைய கடன்காரரை ஒவ்வொருவராக வாவழைத்து, முதலில் வந்தவனைநோக்கி: நீ என் எசமானுக்கு எவ்வளவுகடன்பட்டிருக்கிறுய்? என, அவன் நூறுகுடம் எண்ணெய் கொடுக்கவேண்டியதுஎன்றுன். அப்பொழுது அவனைநோக்கி: உன்கடன்சீட்டைவாங்கி, உடனே உட்கார்ந்து ஐம்பதென்று எழுது என்றுன். பின்னும் வேறொருவனை நோக்கி: உன்கடன் எவ்வளவு என்றுன். அவன் நூறுகலம் கோதுமைஎன்றதும், அவன்: நீஉன்கடன்சீட்டைவாங்கி,எண்பதென எழுதுஎன்று சொன்னுன். அந்தக்காரியஸ்தன் விவேகமாய்ச்செய்ததினுல், எசமான் அவனைப் புகழ்ந்தான். ஏனெனில், ஒளியின்மக்களைவிட இப்பிரபஞ்சமக்கள் தங்கள்சந்ததியில் அதிக விவேகிகளாய் இருக்கிறூர்கள். ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: நீங்கள் இறந்துபோகும்போதுநித்தியகூடாரங்களில்உங்களை ஏற்றுக்கொள்ளும்பொருட்டுஅநீதப்பொருட்களைக்கொண்டு உங்களுக்குச் சிநேகிதர்களைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள் என்றூர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

---

Mal. No. 488. Eng.

## கனடாவில் உண்மையும் பொய்யும்

வடஅமெரிக்காவிலும், கனடாவிலும் பிறேயறிஸ்என்று அழைக்கப்படுகின்ற பெரும்விஸ்தாரமான புல்வெளிகள் காணப்படுகின்றன. இந்தப்பகுதிகளிலே விசித்திரமான இடையர்களினதும், சிவப்புஇந்தியர்களினதும் கட்டுக்கதைகள்பற்றிய பாவனைக்காட்சிகள்பல காண்பிக்கப்பட்டிருக்கின்றன. இந்தக்காட்டுமக்கள் தீப்பொறிகக்கும் குதிரைகள்மீது சவாரிசெய்கிறூர்கள். இரவிலே மரக்குற்றிகொண்டுஅமைத்த தங்கள் குடிசைகளின்முன்பாகத் தீமூட்டி வெளிச்சமேற்றுகிறூர்கள். இந்தக்காட்டுமக்களைப்பற்றிய கட்டுக்கதைகளைப்படித்த மேலைத்தேசத்தவர்கள் அநேகரின் மனோபாவனையில் உள்ளது இதுவாகும். ஆயினும் உண்மைச்சம்பவம் சற்றே மாறுபாடானது...

கனடாவைச்சேர்ந்த சஸ்காற்சுவான் நாட்டிலே நியாயமான அநேக பிறேயறிஸ்புல்வெளிகள் காணப்படுகின்றன. சஸ்காற்சுவான் சர்வகலாசாலையைச்சேர்ந்த சீவசாஸ்திரிகள் இந்தப் புல்நிலங்களைப்பற்றிய பெயர்இடாப்பு ஒன்றைத் தயாரித்திருக்கிறூர்கள். அவர்கள் விநோதநிமித்தமாகப் பிறேயறிஸ் புல்வெளியின் ஒவ்வோர் சதுரமைலுக்குமுள்ள சராசரிசீவவர்க்கவீதத்தைக் கணக்கிட்டுப் பின்வரும் முடிபுக்கு வந்திருக்கிறூர்கள். ஓநாய் ஒன்று, கொம்புள்ளஆந்தைகள்இரண்டு, சிவப்புவாலுள்ள இராசாளிகள் இரண்டு, கீரிகள்ஐந்து, காகங்கள் 15, ஹங்கேரியகவுதாரிகள் 50, சிறுபட்சிகள் 500, எலிகள் 3000, சுண்டெலிகள் 10,000, பூச்சிபுழுக்கள்கிருமிகள் 5,000 லட்சம். ஆகையால் இந்தக்காட்டுஇடையர்களையும், அவர்களது தீப்பொறிகக்கும் குதிரைகளையும்பற்றி உள்ளபடி மிகமிகஅற்பமே விடப்பட்டிருக்கிறது.

எஞ்சியவற்றிலே இந்தக்கணக்கெடுப்பில் விசேஷவிதமாகக் கவனிக்கப்படத்தக்கது, வழமைக்குமாறுக மிகப்பெருந்தொகையான பூச்சிபுழுக்கள் கிருமிகள்இருப்பதேயாம். இவைகள் அத்துணை அதிகமாயிருப்பது கனடாவில்மாத்திரமல்ல, உலகின்ஒவ்வோர் பகுதியிலுமேயாம். இது அயனுந்த நாடுகளிலும், உபஅயனுந்தநாடுகளிலும் விசேஷ அபாயத்தை உண்டுபண்ணுகின்றது. ஏனெனில், அங்கு காணப்படுகிறவைகளிலே மலேரியாச்சுரத்தைக் கொண்டுசென்று பரப்புவதாகிய அபாயகரமான அனோப்பிலெஸ்எனும் நுளம்புகளும் காணப்படுகின்றன.

ஆகையால்முந்திய சர்வதேசசங்கத்தாலே நியமிக்கப்பட்ட மலேரியா நிபுணர்களின் கம்மிற்றியால் கொடுபட்டுள்ள குறிப்புகள் அப்பகுதிகளுக்குப் பிரமாதமான முக்கியத்துவமுடையனவாகும். இந்தக்கம்மிற்றி 1938-ம் ஆண்டு வெளியிட்ட அறிக்கையிலே மலேரியாக்கால முழுவதிலும் அதுவராமற்தடுக்கும்ஓர்நடவடிக்கையாகத் தினமும் 6 கிறெய்ன்குயினைன் அருந்திவரவேண்டுமென்று ஆலோசனைகூறியிருக்கின்றது. மேலும் அழிவுக்கேதுவான மலேரியாச்சுரங்கள் ஓர் கால்காணுமிடத்து 5 முதல் 7 நாட்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறெய்ன் குயினைன் அருந்திவர வேண்டுமெனச் சிபாரிசுபண்ணியிருக்கிறது.

---

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

திவ்விய யேசுவின் இரக்கத்தாலும், பாத்திமாஅன்னை, அர்ச். அந்தோனியார், அர்ச். சூசையப்பர் இவர்களுடைய மன்றுட்டினுலும் என்மனைவி ஒருவித விக்கினமுமின்றிப் பிரசவித்தாள். இன்னும் அவளுக்குப் பூரணசுகம் உண்டாகும்படி யேசுவின் திவ்வியஇருதயம் அருள் புரிவதாக.

கொழும்பு — எ. செல்வம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



தமது குருத்துவ
செம்பொன் யூபிலியை
நிகழும் ஆடிமாதம்
7-ந் திகதி சனிவாரம்
கொண்டாட விருக்கின்ற
வண. L. கிற்ரேசுவாமியார், O.M.I.

## பாப்பரசரின்பிரதாபம்

நம்முடைய தலைமுறையானது திருச்சபையிலே முன்னில்லா தவகையில் அரியசம்பவங்கள்பல நிகழ்ந்தவரும் ஓர்தலைமுறையாகக் காட்சியளிக்கின்றது. இத்தகைய அபூர்வ சம்பவங்களின் புள்ளிவிபரங்களைச் சேகரித்து வைக்க ஆசிக்கும்மக்கள் பன்னிரண்டாம்பத்திநாதபாப்பரசர்சம்பந்தமாகப் பின்வரும்விபரங்களைக் குறிப்பிடுகின்றார்கள்.

கடந்தபரிசுத்தவருடத்தில் அருளப்பெற்ற 22 அர்ச்சியசிஷ்ட, முத்திப்பேறுபெற்ற பட்டங்களுடன் பரிசுத்த பாப்பரசர் தமக்குமுன்னிருந்த மற்றெந்தப் பாப்பானவரைக் காட்டிலும் அதிகமான அர்ச்சியசிஷ்டர்களையும், முத்திப்பேறுபெற்றவர்களையும் ஆக்கியிருக்கின்றார். அவர்இற்றைக்குப்பன்னிருவருடங்களின்முன் பாப்பரசராகத் திருமுடிசூட்டப்பட்டதுமுதல்—இடையிலே யுத்தவருடங்கள் குறுக்கிட்டிருந்தபோதிலும்—அந்தயுத்தவருடங்களிலே அத்தகைய திருப்பட்டங்களை அருளமுடியாதிருந்த போதிலும்—கடந்தவருடஇறுதியோடு அவர் 42 பேருக்கு அர்ச்சியசிஷ்டபட்டம், அல்லதுமுத்திப்பேறுபட்டம் அருளியிருக்கின்றார். அதாவது தமக்குமுன் பதினேழுவருடம் ஆட்சிசெய்திருந்த பதினொராம்பத்திநாதரைக்காட்டிலும்ஒருவருக்குக்கூடுதலாக அத்திருப்பட்டங்களை அருளியிருக்கிறார்.

இன்னும்கருதினல்மார்திருச்சங்கத்திலே முன்னில்லாதவிதமாகப் பெருந்தொகையினரைக் கருதினல்மாராக அவர்நியமனஞ்செய்திருக்கிறார். முன்னர் எக்காலத்திலும்பார்க்க அதிகமானதேசங்களுக்குத் திருச்சபையின் இராசியஸ்தானிகர்கள், தூதர்களை அனுப்பியிருக்கின்றார்.

சமீபத்திலே முத்திப்பேறுபட்டஞ்சூடிய பத்தாம்பத்திநாத பாப்பானவர் பதினொருவருடகாலத்திலே 15 புதிய அர்ச்சியசிஷ்டர்களையும், முத்திப்பேறுபெற்றவர்களையும், பதின்மூன்ருஞ்சிங்காராயபாப்பானவர் பதினைந்து வருடகாலத்திலே அவ்வாறு 29பேரையும் ஆக்கிவைத்தார். இவர்களுக்குமுன் அதிகம்கூடிய தொகையினராகப் 18 அர்ச்சியசிஷ்டர்கள், முத்திப்பேறுபெற்றவர்களை ஆக்கிவைத்தவர், 1775-ம்ஆண்டுமுதல் 1790-ம் ஆண்டுவரையில் ஆட்சிசெய்த ஆறும்பத்திநாதபாப்பானவரே. கடந்த 316 வருடங்களிலும் முத்திப்பேறுபட்டம் அருளப்பெற்றுள்ள 983 பேரில் 819 பேரும் வேதசாட்சிகளே. அத்தனை வருடங்களிலும் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளப்பெற்றவர்கள் 80 பேர் மாத்திரமே. தற்போது இத்திருப்பட்டங்கள் அருளும் விஷயமாய்த் திருச்சடங்காசார திருச்சங்கம் ஆயிரம்சுத்தவாளர், சுத்தவாளிகளையிட்டு விசாரணை நடத்திவருகின்றது.

## நாளு சங்கதிகள்

—:—

—கோறியயுத்தத்தின் ஆரம்பமுதல் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின்பயனாக அமெரிக்கவிஞ்ஞானிகள் நவீன தாங்கி எதிர்ப்புஆயுதம ஒன்றைக் கண்டுபிடித்துச்செய்திருக்கிறார்களாம். இந்தஆயுதம் எந்தவிதமான தாங்கியையும் தாக்கிப் பரிநாசஞ்செய்துவிடக்கூடியதாம். இதுதான் அமெரிக்க 105-மிலிமீற்றர் கொண்ட பீரங்கியாகும். இது ஓர் ஜீப்பிலே அமைக்கப்பட்டிருக்கிறது.

—அமெரிக்க ஐக்கியதேசத்திலுள்ள ஒரேயொரு கத்தோலிக்க தினவர்த்தமானியாகிய "சன் ஹறல்ட்" எனும் பத்திரிகை பிரசுரமாகும்இடத்தை நியூயோக் நகருக்கு மாற்றுதற்கான ஆயத்தம் நடைபெறுகிறது. இது சென்றஐப்பசிமாசம் கூன்சாஸ்நகரிலே முதன்முதலாகப் பிரசுரஞ்செய்யப்பட்டது. அதிகபிரஸ்தாபத்துக்குக் கொண்டுவரும்நோக்கமாகவே இது நியூயோக்நகருக்கு மாற்றப்படுகிறது.

—ஐக்கியநாடுகளின் ஸ்தாபனம் கேட்கும்போது யுத்தசேவைசெய்வதற்குத்தயாராய்க் குறைந்தபட்சம் 1,100 போர்வீரரைக்கொண்ட ஓர்இராணுவ பலத்தைத் தான் என்றைக்கும் வைத்திருப்பதாகக் கிறீஸ் அரசாங்கம் சென்றசனிக்கிழமை தெரிவித்திருக்கிறது. ஐ. நா. பாதுகாப்புச்சபையோ அன்றேல்பொதுச்சபையோ கேட்கும்போது ஐ. நா. ஸ்தாபனத்திற்சேர்ந்துள்ளநாடுகள் தங்கள் ஆயுதபலங்களில் ஒருபகுதியை விட்டுக்கொடுக்க வேண்டுமென்ற தீர்மானத்தின்பேரிலேயே அதுஇவ்வாறு தெரிவித்துள்ளது.

—வத்திக்கானிடமாக அமெரிக்க சனாதிபதி ட்றூமன்அவர்களின் பிரத்தியேக பிரதிநிதியாயிருந்து இற்றைக்குப் பதினெட்டுமாசங்களின்முன் சுகத்தாழ்வுகாரணமாகத் தம்முடையபதவியை இராசினாமாச்செய்தவரான திரு. மீறன் ரெய்லர்அவர்கள் சமீபத்திலே பரிசுத்தபிதாவின்பேட்டிபெற்றுப் பதினைந்துநிமிஷம்வரை அவருடன் சம்பாஷித்ததிலிருந்து திரும்பவும் வத்திக்கானுக்கும், அமெரிக்கஐக்கியதேசத்துக்குமிடையே இராசீய தொடர்பு ஏற்படுமென்றநம்பிக்கை பிறந்திருக்கிறது.

—முத். பத்தாம்பத்திநாதரின் திருமேனிமுன்பாகச் செபஞ்செய்யுமாறு பத்துலட்சம்பேருக்குமேற்பட்டசனங்கள் அர்ச். பேதுருவானவர்மகாலயத்தைத் தரிசித்திருப்பதாகச் செய்தி கிடைத்திருக்கிறது. பத்துப் பெரிய மெழுகுவர்த்திகள் சூழவர எரிந்துகொண்டிருக்க, அறிக்கையின் பலிபீடபக்கமாக வைக்கப்பட்டிருந்த அவர்திருமேனியை அவ்வார முழுவதிலும் யாத்திரிகர்கள் அதிகாலைமுதல் மாலைவரையில் தரிசித்தவண்ணமிருந்தார்களாம்.

—பிரித்தானியஅரசின் யுத்தகால பிரதமரான திரு.வின்ஸ்ரன் சேர்ச்சில் அவர்கள் இங்கிலாந்திலே பிக்கின்ஹில் எனுமிடத்தில் பேசியபோது, வருகாலயுத்தமஎதுவம் முந்தியயுத்தம் எதைக்காட்டிலும் ஆகாயத்திலிருந்து படைகளைப் பெருந்தொகையாக இறக்குவதையும் அடக்கியிருக்குமென்றும், அதனால் பிரித்தானியஅரசு தற்போதிலும் மிகக்கூடிய ஆகாயப்பலத்தைக்கொண்டிருக்கவேண்டுமென்றும் கூறியிருக்கின்றார்.

—இவ்வருடஇறுதியிலே இந்தியா, பாகிஸ்தான், இலங்கை ஆதியநாடுகளுக்குப் பிரயாணவர்த்தக ஜேர்மன் பொருட்காட்சியொன்று காண்பிக்கப்படவிருக்கிறது. நூறுஜேர்மன்வர்த்தகசமுதாயங்கள் ஒன்றுசேர்ந்து பளுவான யந்திரவகைகள்முதல் மருந்துகள்வரையில்அடங்கிய ஜேர்மன்வியாபாரப்பொருட்களை ஓர்விசேஷ கப்பலில்அமைத்து ஓர்மிதக்கும்பொருட்காட்சியாக மூன்றுதேசங்களிலும் காண்பிக்கவிருக்கின்றன. மேற்குஜேர்மன்அரசாங்கமும் இதனை ஆதரித்திருக்கின்றது.

—மத்தியலண்டன் நகரிலிருந்து 30 மைல்சுற்றுடலுள் ஓர்அணுக்குண்டு வீசப்படுமானால், அதன்விளைவு யாதாகும்என்பதுபற்றித் 90 லட்சம் சனங்களைக்கொண்ட லண்டன்தலைநகரின் பாதுகாப்புவிஷயமாய் அந்நகரின்பரிபாலன—தலதாபன அதிகாரிகள் 250 பேர் அங்கு சென்ற வெள்ளிக்கிழமை கூடி அந்தரங்கமாகக் கலந்துபேசியிருக்கின்றார்கள்.

—ஆபிரிக்காவிலே பெல்ஜியகொங்கோநாட்டில் சென்ற 1950-ம்ஆண்டிலே இரண்டுலட்சம்சுதேசிகள் மனந்திரும்பிக் கத்தோலிக்க திருமறையில் சேர்ந்திருக்கிறார்கள். இவர்களுடன் அந்நாட்டில் தற்போது 46 லட்சத்து 50 ஆயிரம் கத்தோலிக்கர் இருந்துவருகின்றனர். அதாவது அந்நாட்டுமக்களில் ஏறக்குறைய அரைவாசிப்பேரும் கத்தோலிக்கரே.

—யோர்தான்நாட்டிலே அம்மன்நகர் அதிமேற்றிராணியாரான மொஞ். மிக்கேல்அஸாவ்ஆண்டவர் அந்நாட்டின் அப்துல்லாமன்னராலே முதல் வகுப்புக்குரிய சுதந்திரவிருது அளித்துச் சன்மானிக்கப்பெற்றிருக்கின்றார். யோர்தான்நாட்டுமன்னர் அளிக்கக்கூடிய மிகஉந்நதமகிமைவிருது இதுவாகும்.


## தலைவில்லு பெரிய சந்தாளு மாதா திருநாள்.
## 19—29 ஆடி 1951.

ஆடி 19-ந் திகதி : கொடியேற்றம்.
ஒவ்வொருநாளும் மாலை 6-30 மணிக்கு ஆராதனை தொடங்கும்.
20-ந் திகதி : மாலை 6 மணிக்கு மகா வந்திக்கத்தக்க சலாப மேற்றிராணி ஆண்டவர் அவர்களால் சிலுவைப்பாதை ஸ்தாபித்தல்.
21-ந் திகதி : பொன்ரிபிக்கல் வேஸ்பர்ஸ் ஆராதனை.
22-ந் திகதி : பாடற்பூசை, சுற்றுப்பிரகாரம்.
26-ந் திகதி : மாலை 6 மணிக்கு திவ்வியநற்கருணைச் சுற்றுப் பிரகாரம்.
28-ந் திகதி : 6-30 பொன்ரிபிக்கல் வேஸ்பர்ஸ்.
29-ந் திகதி : காலை 6-30 பொன்ரிபிக்கல் பாடற்பூசை.
இதன் பின் உட்கோவிலில் ஒரு பூசை நடைபெறும்.
பச்சைப் பூக்கள் அனுப்பினல் வெகு நன்றியோடு ஏற்றுக் கொள்ளப்படும்.

**Rev. Fr. Arthur Martin Fernando,**
Administrator.

Talawila,
Endala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமது குருத்துவ
செம்பொன் யூபிலியை
நிகழும் ஆடிமாதம்
7-ந் திகதி சனிவாரம்
கொண்டாட விருக்கின்ற
வண.
C. மார்ஜெறிசுவாமியார், O.M.I.

## அமெரிக்காவும் சுதந்திர நாடுகளும்

—:—

உலக சுதந்திரநாடுகளைக் கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பினின்றும் பாதுகாப்பதற்காக அவற்றினிடையே பரஸ்பரபாதுகாப்பை நிறுவிக்கொள்வதான ஓர்திட்டத்திற்கு அமெரிக்கா 850 கோடிடலர் உதவிசெய்ய முன்வந்திருக்கிறது. இப்பணம் உலகிலுள்ள சுதந்திரநாடுகளின் இராணுவ, பொருளாதார அபிவிருத்திக்கு உதவப்படும். அமெரிக்கசனாதிபதி ட்றூமன் அவர்கள் வெளியிட்டுள்ள இவ்வுதவித்திட்டத்தை அமெரிக்க வெளிநாட்டுமந்திரி அமெரிக்ககாங்கிரஸில் விளக்கிக்கூறியபோது பின்வருமாறுதெரிவித்தார்:

யப்பானிலிருந்து ஆப்கானிஸ்தான் வரை அர்த்தசந்திர வடிவத்தில் அமைந்திருக்கும் ஆசியாப்பகுதி கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பு அபாயத்திற்குள் இருந்துவருகிறது. இப்பகுதியிலுள்ள ஆசியநாடுகள் சமீபத்தில் பெற்றுள்ள சுதந்திரத்தைப் பலப்படுத்தி, உறுதியான அரசாங்கங்களை அமைத்து, அமெரிக்காவுடன் நேசபான்மையாய் இருக்கவேண்டுமென்பதே நமதுநோக்கம். இந்தத்தென்கிழக்கு, தூரகிழக்கு ஆசியாப்பகுதியிலுள்ள நாடுகளில் 70 கோடிமக்கள் வாழ்கின்றனர். இத்தொகை உலகசனத்தொகையில் பத்தில் மூன்றுபங்காகும். இப்பகுதியிலுள்ள இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், இலங்கை, நேபாளம், சீயம், பர்மா, இந்தோனீஷியா, பிலிப்பைன், போர்மோஸா, கோறியா, இந்தோசீனா ஆகியநாடுகளுக்கு இந்தப் பரஸ்பரபாதுகாப்புத் திட்டத்தின்படி ஐம்பத்தைந்தரைக்கோடி டலர் இராணுவஉதவியும், மூப்பத்தேழரைக் கோடிடலர் பொருளாதாரஉதவியுமாக மொத்தம் 93 கோடிடலர் உதவி செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதேபோன்று மத்தியகிழக்கு ஆசியாப்பகுதியிலுள்ள நாடுகளும் கம்யூனிஸ்தஆக்கிரமிப்பு அபாயத்திற்குட்பட்டிருக்கின்றன. அவற்றுக்குநாற்பத்தொன்றரைக்கோடிடலர் இராணுவ உதவியும், பன்னிரண்டரைக்கோடிடலர் பொருளாதார உதவியுமாக மொத்தம் 54 கோடிடலர் உதவி செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மத்தியகிழக்குப்பகுதியின் பாதுகாப்பில் பிரித்தானியும் கவலைகொண்டிருக்கிறது. லண்டனில்நடைபெற்ற இந்தியா, பாகிஸ்தான், இலங்கை தவிர மற்ற ஆறு சாம்பிராச்சியநாடுகளின் மகாநாட்டில் மத்திய கிழக்குப்பகுதியின் பாதுகாப்பைக்குறித்தும், தென்மேற்குப் பசிபிக்பிரதேசப் பாதுகாப்பைக்குறித்தும் ஆலோசித்து முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

# மோக்ஷபாதை

(கூடின செபங்களுடன்)

**விற்பனைக்குத் தயாராகி விட்டது.**

**விலை பிரதி ஒன்று**

கலிக்கோக்கட்டு ... **5-50**

தோல்கட்டு ... **7-50**

தபாற்செலவு சதம் **35.**


## திருநாள் அட்டவணை

ஆடிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| வெ | 6 | அர்ச். கோவாரப்பர் | (சி) |
| சனி | 7 | அர்ச். சிறில் | (வெ) |
| ஞா | 8 | இஸ்பிரீத். ஆகமன. பின்வரும் 8-ம் ஞாயிறு — அர்ச். எலிசபேத்தம்மாள் | (ப) |
| திங் | 9 | அர்ச். அனத்தோலியம்மாள் | (ப) |
| செ | 10 | அர்ச். ஏழுவேதசாட்சிகள் | (சி) |
| புத | 11 | அர்ச். பத்திநாதர் | (சி) |
| வியா | 12 | அர்ச். குயல்பேர்த்தருளப்பர் | (வெ) |


சத்தியவேத

# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு

ஆடிமாதம் 5-ந் திகதி


## ஆடிமாதப் பத்திமுயற்சி

(Communicated)

II

ஆகையால்நமக்கு — நம்மவர்களுக்குத் தேவையான சகலத்துக்காகவும், பரசமயிகள், பாவிகள், ஆத்துமசரீர உபாதனைப் படுகிறவர்கள், அன்றன்று மரணாவஸ்தைப்படுகிறவர்கள், உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களுக்குத் தேவாநுக்கிரகம் தாராளமாகக்கிடைக்குமாறும், திருச்சபையின் அவசியங்கள் தீவிரமாயும், நிறைவாயும், நிவிர்த்தியாகும்படியும், சனசாகியங்களிடையே நீதி,சமாதானம்நிலவி நிலைபெறும்பொருட்டும் தேவ இரட்சாமூர்த்தியாகிய யேசுநாயகசுவாமியின் திவ்வியஉதிரத்தை அநுதினமும், விசேஷமாய்த்திவ்வியபூசைவேளையிலும், திவ்வியநன்மை உட்கொண்டபின்னரும், சற்பிரசாதநாதர் தரிசிப்பின் போதும் தேவதாயார்மூலமாக ஒப்புக்கொடுத்து மன்றாடும் சுகிர்தபழக்கத்தைப்பயின்றுகொள்ள முயன்று வருமோமாக.

தேவகர்த்தரின் திருஇரத்தப் பத்திக்கு நேரப்பெற்றுள்ள ஆடிமாசத்திலே, அத்திருஇரத்தத் திருநாளாகிய ஆடிமுதலாந் திகதியன்றே இப்பத்திமுயற்சியை அநுட்டிக்க, பிறரைக் கொண்டு அநுட்டிப்பிக்கப் பிரயாசிப்பதற்கு ஊக்கித்து முயலுவோமாக.

அனுதினமும் தேவன் ஆதரித்துவரும் கோடிக்கணக்கான ஆத்துமாக்களே அவருக்கு எதிராகக் கட்டிக்கொண்டுவரும் அக்கிரமங்கள்குறைந்துபோவதற்கு வேண்டும் விசேஷ தேவானுக்கிரகத்தைப் பெற்றுக்கொள்வதற்குத் தினந்தினம் காலைமாலை தேவஉதிரத்தைத் தேவபிதாவுக்கு ஒப்புக்கொடுத்துப் பிரார்த்தனைசெய்வது மகாசித்திகரமான ஓர்உபாயம். உற்றசமயத்தில் தேவஉதவியைப் பெற்றுக்கொள்ள மாதாவழியாக மகனுரின் இரத்தத்தை நித்தியபிதாவுக்குஒப்புக்கொடுத்துமன்றாடுவது மகானுகூலமான வழிஎன்பதை மனத்தின்கண் இருத்திக்கொள்வோமாக.

"கூரேதார்ஸ்" எனவும்படும் அர்ச். வியானிநாதர் தமது ஞானமக்களைநோக்கி: என்பிள்ளைகளே! நான்சொல்வதைநன்ருகக் கவனியுங்கள்; எவ்வெப்போது நான்ஏதாவது தேவ அருளைப் பெற்றுக்கொண்டேனோஅவ்வப்போதெல்லாம் யேசுநாதசுவாமியின் விலையேறப் பெற்ற திருஉதிரத்தைத் தேவதாயார்வழியாக நித்தியபிதாவுக்கு ஒப்புக்கொடுப்பித்து மன்ருடியே பெற்றுக்கொண்டேன்; பூசைவேளையே, எழுந்தேற்ற நேரமே, இந்த மன்ருட்டுக்கு மகாவாய்ப்பான ஓர்சமயமாகும்;தேவதாயாரைச்சங்கித்து மகிமைப்படுத்துவதைக் குறித்து டோமினிக்எனவும்படும் அர்ச். சாமிநாதர் பிரசங்கித்துக் கொண்டு நின்றவோர் தருணத்திலே, அவருக்குப் பத்திகவனமாகச் செவிகொடுத்துக்கொண்டிருந்த விசுவாசிகள்மீது தேவதாயார்தாமே தமதுதிருக்குமாரனின் திருஉதிரத்தைத் தெளித்தருளினர்; இந்த அர்ச்சியசிஷ்டர்தாமே பூசைசெய்து திருப்பாத்திரத்தை எழுந்தேற்றஞ்செய்யும்வேளையிலே தேவதாயார் தமதுதிவ்விய குமாரனின் திருஇரத்தத்தைச் சமுகமாயிருந்த விசுவாசிகள் மீது ஊற்றுவதை இராசாவும் இராணியும் உட்பட மூந்நூறுவிசுவாசிகள் கண்ணாரக்கண்டார்கள்என்று இந்த அர்ச்சியசிஷ்டரின் சீவியசரிதையிற் சொல்லப்பட்டிருக்கின்றது; எனது இரத்தத்தின்மூலமாக எனது பிதாவின் நீதிக்கோபத்தின்மேல் செயங்கொள்ளுகின்றேன். மனிதனைச் சருவேசுரனுடன் சமாதானப்படுத்திவிடுகிறேன் என்று திவ்வியகர்த்தர்தாமே அர்ச். மெத்தில்தம்மாளுக்கு வெளிப்படுத்தியருளினர் என்ருர். உத்தரிப்புஸ்தல ஆத்துமாஒன்று என்றி சூசோஎன்னும் சுத்தவாளருக்குக் காணப்பட்டு: நாங்கள் வேதனை தணிந்து ஆறுதல் அடைய இரத்தந்தான்-இரத்தந்தான்தேவை; சகோதரனே! நாங்கள் ஒருவருக்கொருவர் வாக்கிட்டபடி பூசைகள்தான்தேவை என்று சொல்லிற்ரும்.

பரிசுத்த தேவதாயாரே! உமது திருக்குமாரனின் திவ்வியஉதிரத்தை நித்தியபிதாவுக்கு ஒப்புக்கொடுத்து என் கருத்துகளுக்காக மன்ருடியருளும்.

வேருேர்பலனுள்ளசெபம்:

நித்தியபிதாவே!என்பாவங்களுக்குப் பரிகாரமாகவும், உத்தரிப்புஸ்தல ஆத்துமாக்களுக்காகவும்,திருச்சபையின் அவசியங்களுக்காகவும், யேசுக்கிறீஸ்துநாதரின் விலையேறப்பெற்ற இரத்தத்தைத் தேவரீருக்கு ஒப்புக்கொடுக்கிறேன்.

# குருத்துவ தங்க யூபிலி

யாழ்ப்பாண மேற்றிராசனமாகிய ஞானப்பூங்காவிலே எமது ஞானக்கண்முன்பாக இரு மகாரிஷிகள்போலும், தவமுனிவரர்கள்போலும் இன்பகாட்சியளித்து, எவருமே கையெடுத்து அன்புபாராட்டத் தகும் அரியமகாத்மாக்களாக—தமது உடல்பொருள்ஆவி மூன்றினையும் அமலனின் தொண்டிற்கென அர்ப்பணஞ்செய்து, ஆண்டவன் தோத்திர வாஞ்சையோடும், ஆன்மஇரட்சணிய அபேட்சையோடும் எம்மத்தியிலே ஐபத்தாண்டுகளாக அயராதுழைத்துவந்து, இன்று நரைதிரைகண்டு, தபோதனரின் திருவடிவங்கொண்டு, எமது குன்ருத அன்புக்கும், குறையாத நன்றிக்கும் என்றுமே பாத்திரமான குருதிலகங்களாக—திகழ்ந்து கொண்டிருக்கும் வண. எல். கிற்ரூ சுவாமியவர்களும், வண. சி. மார்ஜெறி சுவாமியவர்களும் நிகழும் ஆடிமாதம் 7-ந்திகதியாகிய நாளை நின்றுவரும் சனிவாரம் தங்கள் குருத்துவ தங்கயூபிலிவிழாவைக் கொண்டாடவிருக்கும் மங்கல செய்தியானது, அவர்களின் சகோதர குருப்பிரசாதிகளுக்கும், ஞானமக்கள் சகலருக்கும் ஓர் ஆனந்தசுபசெய்தி ஆகுமென்க.

இவ்விரு குருமுனிவர்களிலும் இப்போதுசரியாய் 76 வயசுடையரான வண. லூயிஸ் மரியோ கிற்ரூசுவாமிகள் பிரான்சிலே லீயேஜ் நகரில் விளங்கும் பேரான குருமடத்திற்படித்து, 1901-ம் ஆண்டு ஆடிமாதம் 7-ந் திகதி குருப்பட்டம்பெற்று, அவ்வாண்டிலேயே ஓர் அமலோற்பவிசபைக் குரவராய் யாழ்ப்பாணம் வந்தார். அவர் இங்கு வந்தபின் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, சில்லாலை, இளவாலை ஆகிய விசாரணைப்பங்குகளிலே 1917-ம்ஆண்டுவரை திருத்தொண்டாற்றி வந்தார். அதன்மேல் கடந்த 44 வருடங்களாக அவர் மேற்றிராசன மாளிகையில் வதிந்து, மேற்றிராசன ஆலோசனைச்சங்க அங்கத்தவராகவும், சுப்பீறியராகவும், விக்கார் ஜெனறலாகவும், ஐந்துமுறைகளிலே இம்மேற்றிராசன பரிபாலனராகவும், புரேக்கியூறேற்றர் ஜெனறலாவும்உந்நத அதிகாரபதவிகளைக் கண்ணியமாகவகித்திருந்து, எவ்வெவராலுமே பெரிதும்அன்புபாராட்டவும், நன்குமதிக்கவும் பெற்றுவருகின்ருர். எமது மேற்றிராசனத்திலே இத்தகைய பெரும்அதிகாரபதவிகள் அனைத்தையும் ஒருங்கேவகித்திருந்த—மேற்றிராசனமாளிகையிலேயே அதிகாரபதவிகள்வகித்து அத்துணைநெடுங்காலம்வசித்திருந்த-குருமார் அரிதிலும்அரிதேயென்று நினைக்கும்படியான-நினைந்து வியக்கும்படியான சுவாமியவர்கள் ஓர் பெரிய கல்விமானென்று கருதப்பட்டவருமன்று. சர்வகலாசாலைப் பட்டமெதுவும் பெற்றுக்கொண்டவருமன்று. ஆனால், அவரில்விளங்கிய மதிநுட்பமும், மற்றும் அரிதான குணவிசேஷங்களுமே அவற்றிற்கெல்லாம் காரணமன்றிப் பிறிதொன்றுமன்று. அன்பும் அனுதாபசிந்தையும், ஆய்ந்தோய்ந்து செயலாற்றும் அருந்திறமையும், சீவகாருண்யமும், அமைதியானபோக்கும், பரந்தநோக்கும் ஆதியனவெல்லாம் அவரில் சுபாவமாகவே அமைந்துள்ள சிறந்தசுகுணங்களாகும்.

தமதுமுகத்தில் எப்போதுமே அமைதியுஞ் சாந்தமும் அரசாளக்காட்சியளிக்கும் சுவாமியவர்களை முந்தச்சந்திக்குமிடத்து, அவரது மொழிகளைக் கவனிக்குமிடத்து, அவர் கடுங்கோபமுடையவரென்றும், கடுமொழி பகருகிறவரென்றுமே எவரும் கருத்திற்கொள்வர். ஆயினும் பிந்த அவரதுபுனிதவதனத்திற்தவழும் புன்முறுவலையும், அன்புததும்பும் இன்பமொழிகளையும் அவதானித்துப் பெரிதும் அதிசயமுற்றவர்களாய் அவரை மனமார வாழ்த்திக்கொணடேசெல்வர். புறத்தேமுள்ளுடைய பலாப்பழமானது அகத்தே மதுரமான சுவை பொருந்திய சுளையைக்கொண்டிருப்பதுபோலச் சுவாமிகளும் அத்துணை மதுரமான சுபாவமுடையவரென அன்ருெருநாள் காலங்கண்ட குருப்பிரசாதி ஒருவர்கூறிநின்றமையும் ஈண்டுகுறிப்பிடத்தக்கது. குருமாரோ அன்றேல் தமக்குக்கீழுள்ள பணியாளரோ நோய்வாய்ப் படும்போது அல்லது கஷ்டப்படும்போது அவர் பெற்ற தாய்தந்தையிலும் மிக்கபேரன்புடன் காண்பித்துவந்த உருக்கமான பற்றுதலோ உரைக்கற்பாலதன்று. மிகவும் பொறுப்புவாய்ந்த பதவிகளை நெடுங்காலம் வகித்து இம்மேற்றிராசனத்தின் பொருளாதார விஷயமாயும், பிறவிஷயமாயும் சுவாமிகள் ஆற்றியுள்ள போற்றற்பால பெரும்பணிகளும் இம்மேற்றிராசன சரித்திரத்தில் பொன்னட்சரங்களால் பொறிக்கப்படத் தக்கனவேயாம்.

நிற்க, யூபிலிநாயகர்களில் மற்றொருவரும், தற்போது சரியாய் 76 வயசுடையவருமான வண. செலெஸ்ரின் மார்ஜெறி சுவாமியவர்களும் பிரான்சிலே லீயேஜ்நகரில்விளங்கும் அதே குருமடத்திற்ருனே 1901-ம் ஆண்டு ஆடிமாதம் 7-ந்திகதி குருப்பட்டம்பெற்ருர். அடுத்த மாதமே யாழ்ப்பாணத்தை நோக்கிப் பிரயாணமாய் இங்கு வந்து சேர்ந்தபின் ஊர்காவற்றுறை, வவுனியா, நாரந்தனை, யாழ்ப்பாண மேற்றிராசனக் கோவில், அடைக்கலமாதா கோவில், மயிலிட்டி, இளவாலை ஆதியாம் பலவிசாரணைப்பங்குகளிலும் அருந்தொண்டாற்றி வந்து அங்கெல்லாம் அருமைப் பெருமையான ஓர் குரவரெனக் கொண்டாடப் பெற்றிருக்கின்ருர்.

அன்புததும்பும் அவரது சுபாவமும், அருளோடுகூடிய அன்புகனிந்த பார்வையும், களங்கமேயறியாத மனப்பான்மையும் எவரையுமே தம்பால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ந்திழுக்குஞ் சக்திரோய்ந்தன. "குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்திலே" எனும் பழமொழிக் கொப்பானவராய், எந்தவேளையுமே மலர்ந்தவண்ணமும், புன்னகை தவழ்ந்த வண்ணமும் பொலிந்துவிளங்கும் அவர்வதனம் எவரைத்தான் வசீகரங்கொள்ளச் செய்யாதிருக்கும்? நகைச்சுவைதேங்கிய அவரது ஹாஸ்ய மொழிகளைக்கேட்டுச் செவிகுளிர்ந்து எவருள்ளந்தான் மகிழ்ச்சிகொள்ளாதிருக்கும்? சுவாமியவர்கள் ஏழைகள்பால் மிகுந்த இரக்கசிந்தையுடையவர். அந்த நாளிலே அவர் யாழ்ப்பாணம் வந்தபின் சீமையிலிருந்து தமது குடும்பத்தினர் பணமாகவும், பிறவாகவும் ஏராளமாகத் தமக்கு அனுப்பிக்கொண்டிருந்தவைகளையெல்லாம் அவ்வேழை மக்களுக்கு வரையாதுகொடுத்து வந்த அவரது வள்ளன்மையைக் கண்ணுற்ருர் பலரும் அவர் ஏதோ ஓர் செல்வஞ்செல்வாக்குள்ள குடும்பத்தைச் சேர்ந்தவராயிருக்க வேண்டுமெனப் பேசிக்கொண்டனராம். ஆனல், அவரோ இதுவிஷயமாய் எப்போதும் மவுனமே சாதித்துவந்தனராம். பொதுவிலே சுவாமியவர்கள் தாம் போனவிடமெல்லாம் தமது ஞானமக்களின் சேமாபிவிர்த்திக்காகச் சிறப்பாயுழைத்து, சுவைக்கச்சுவைக்கத் தெவிட்டாத அமிர்தநிகர்த்த தமதுமதுரமொழிகளாலே யாவரையும் சந்துஷ்டியாக வாழச்செய்து, எல்லோரது அன்பையும், நன்மதிப்பையும் அதிகமாகப்பெற்றுஅவர்களால்பெரிதும் நன்றிபாராட்டப்பெற்று வந்திருக்கின்ருராகவே, அவரது திருத்தொண்டுகளும் மிகவும் புகழ்ச்சிக்குரியனவாகும்.

தமது குருத்துவவாழுள்முழுவதையும் நம்மிடையே பரிபூரணமாகக் கழித்து, நமக்காக அல்லும்பகலும் அயராதுழைத்தும், கடைசியாக நமதுமண்ணுக்கே தமது காயத்தையும் தியாகஞ்செய்யும் அந்தப்பாக்கியமான நாளை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் அருமைப்பெருமையான இந்தக் குருமுனிவர்கள் இருவரும் தமது குருத்துவ செம்பொன்யூபிலியைக் கொண்டாடவிருக்கும் இச்சுபசந்தர்ப்பத்திலே அவர்கள்மேலும், அவர்கள் மூலமாக நம்மேலும் அனந்தகருணாநிதியான சர்வேசுரன் கடந்த ஐம்பத்தாண்டுகளிலும் வரையாது பொழிந்தருளிய சகல வரப்பிரசாதங்களுக்காகவும் அவர்களுடன் நாமும் சேர்ந்து தேவதோத்திர கீதங்கள்பாடுவோம்! அவர்களின் மகா யூபிலிவிழாவைக் கொண்டாடுவோம்! நன்றியறிதல்குன்ருத நல்லிதயங்களுடன் ஒன்றுகூடுவோம்! அன்பின் மலர்மாலைகள் சூடுவோம். யூபிலிச்சோபனங்கூறி அவர்களின் திருக்கர ஆசியை நாடுவோம்.

---

### திவ்வியபூசையின் மகத்துவம்

விற்பனைக்குத்
தயாராயிருக்கின்றது.

பிரதி விலை ரூபா 2-50

---

## சுதேச வர்த்தமானம்

### சீமெந்துத் தொழிற்சாலை

கைத்தொழிற்பகுதி ஐக்றிங் தலைவரான திரு. எல். ஜே. டி. பெர்ணண்டோ அவர்கள் சென்றவெள்ளிக்கிழமை காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலையைத் தரிசித்து, அன்றுமுதல் பிரதம இஞ்சினீரான திரு. ஜே. எச். ஹோர்ஸ் அவர்கள் திரு. எச். டி. சொறென்சனின் பதவியைக் கையேற்று, ஐக்றிங் வேலை மனேஜராகக் கடமைபார்த்து வருவாரெனத் தெரிவித்திருக்கின்ருர். இந்தமாற்றத்துக்குக் காரணம், திரு. சொறென்சனின் ஒப்பந்தகாலம் முடிந்துவிட்டமையேயெனத் தெரியவருகிறது.

### மந்துவிற் கொலைவழக்கு

மந்துவில் கிராமத்தலைமைக்காரரான திரு. வி. இராசரத்தினம் என்பவருக்கு மரணத்தை உண்டுபண்ணியதாகக் குற்றஞ்சாட்டி அவ்வூரைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை, முருகுப்பிள்ளை என்னும் இருவர் சாவகச்சேரிக்கோட்டிலே பொலிசால் சென்றவியாழக்கிழமை வழக்குத் தொடரப்பட்டிருக்கின்றனர். அன்றுநடந்த விசாரணையிலே, கே. தம்பையா என்பவர் கூறியசாட்சியில், அன்று நல்லநிலாவெளிச்சமான இராவிலே வயலிலிருந்து தான் திரும்பிக்கொண்டிருந்தபோது, குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்களில் ஒருவர் அவருடைய கழுத்தைத் திருகவும், மற்றவர் காலை இடக்குகொண்டு அவர் உடலின்மேல் உட்கார்ந்திருக்கவும் கண்டதாகக் கூறினர். பொலிஸ்நாயால் அடிச்சுவடு பிடித்துக் காட்டிக்கொடுக்கப்பட்ட பி. சின்னத்துரை என்பவரை விசாரணை செய்தபோது, குற்றஞ்சாட்டப்பட்டுள்ள சிதம்பரப்பிள்ளை தன்னை அழைத்து, கிராமத்தலைமைக்காரரின் பிரேதத்தைப் ஓர் பற்றைக்குள் தூக்கிப்போய்எறியத் தங்களுக்கு உதவி செய்யும்படி தன்னைக்கேட்டதாகத் தெரிவித்தார். இவர் ஐயாயிரம் ரூபா பிணையில் விடப்பட்டிருக்கின்ருர். வழக்குவிசாரணை பின்போடப்பட்டது.

### பிள்ளைகளை வேலைகொள்வது

இலங்கையிலே சிறுவர் சிறுமிகளை வேலைக்கு அமர்த்துவதை விலக்கும் புதியசட்டமொன்று சமீபத்திலே பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்குக் கொண்டுவரப்படவிருக்கிறது. இச்சட்டம் அரங்கேறுமிடத்து, தொழிற்சாலைகளிலும், தோட்டங்களிலும், வர்த்தகஸ்தாபனங்களிலும் பதினன்கு வயசுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகளை வேலைகொள்வது அரசாங்கத்தாலே விலக்கிவிடப்படும். இச்சட்டம் நடைமுறைக்கு வருங்கால், பாடசாலைச் சட்டத்தையும் கண்டிப்பாக அனுசரணைக்குக்கொண்டுவரவேணடுமென்றும் அபிப்பிராயம் தெரிவிக்கப்படுகிறது.

### கடுதாசித் தொழிற்சாலை

மட்டக்களப்பிலே நெடுநாளாக எதிர்பார்க்கப்பட்டிருந்த அரசாங்க கடுதாசித் தொழிற்சாலையை அமைக்கும் வேலை ஒப்பந்தத்தில் கொடுபடும் நிலைமையில் இப்போது வந்திருக்கிறது. இந்தத்தொழிற்சாலையை அமைக்க ஏற்படும் செலவு மதிப்பு ஏறக்குறைய 1 கோடியே 20 லட்சம் ரூபா முதல் 1 கோடியே 50 லட்சம் ரூபா வரையிலாகும். இதிலே வேலைதொடங்குமிடத்து, வருடம் ஒன்றுக்கு 300 நாள் வேலைநடந்து, தினமும் 12 முதல் 15 தொன் கடுதாசிவரையில் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இலங்கையில் தேவைப்படும் கடுதாசி முழுவதுக்கும் இத்தொகை போதியதாகுமாம்.

### பெறேரா சுவாமியாரின் ஞாபகம்

காலி, அர்ச். அலோசியஸ் கல்லூரிப் பழையமாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் சமீபத்தில் கூடி, பெரியகல்விமானும், சரித்திர ஆராய்ச்சி வல்லுநருமாக விளங்கியிருந்த காலஞ்

---

தமது குருத்துவ தங்கயூபிலி விழாச் சுபதினமாகிய நாளை நின்றுவரும் 7-ந்திகதி சனிக்கிழமைகாலை 7 மணிக்கு வண. எல். கிற்ரேசுவாமியவர்கள் பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே யூபிலித்தோத்திர திவ்வியபூசை நிறைவேற்றுவார். அத்தருணம் அவரது உடன்யூபிலிநாயகரான வண. சி. மார்ஜெறி சுவாமியவர்களும் சமூகமாயிருப்பார்.

---

சென்ற வண. எஸ். ஜி. பெறேராசுவாமிகளின் ஞாபகத்தை நிலைநாட்டுமாறு, அக்கல்லூரியில் இருந்துவருகின்ற சுவாமிகளின் நூல்நிலையத்தைத் திருத்தி விசாலமாக்குவதென்றும், அதிலே அதிகமான புத்தகங்களைச் சேகரித்துவைப்பதென்றும் தீர்மானித்திருக்கிறது. ஏலவே சேகரிக்கப்பட்டுள்ளநிதியில் 8,000 ரூபாவை அந்நூல் நிலையத்தைத் திருத்துவதற்கும், விசாலமாக்குவதற்குமாகச் செலவிடுவதென்றும், மீதிப்பணம் சுவாமிகளின்ஞாபகமாக, சர்வகலாசாலை வித்தியா வெகுமதியுடன் சேமித்துவைக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அக்கல்லூரியின் வாசிகசாலையைத் திருத்திப் புதுப்பிக்குமாறு அதன் பழையமாணவரும், காலி மேயருமாகிய திரு. ஏ. ஆர். எம். தாஸிம் அவர்கள் பதினயிரம் ரூபா நன்கொடை அளித்திருக்கின்ருர்.

### போஸ்ற்மாஸ்றர் ஜெனறல்

போஸ்ற்மாஸ்றர் ஜெனறலாகிய திரு. ஏ. இக்னேஷஸ் பெறேரா அவர்கள் இலங்கைத் தபாற்கந்தோர்ப்பகுதியிலே 45 வருடகாலம் சேவைசெய்த பின்னர் வருகிற ஐப்பசிமாதம் 30-ந் திகதி இளைப்பாறுதற்காயத்தமாகச் சமீபத்திலே லீவிற்செல்லவிருக்கின்ருர். இவர்ஆரம்பத்தில் மூன்ரும்வகுப்பைச் சேர்ந்த ஓர் போஸ்ற்மாஸ்றராயிருந்து, தமது விடாமுயற்சியாலும், மதியூகத்தாலும் படிப்படியாக உத்தியோக உயர்ச்சிபெற்று இலங்கையரான முதற் போஸ்ற்மாஸ்றர் ஜெனறலாக 1948-ம் ஆண்டு நியமனம்பெற்று ஆதிபிரஸ்தாபம் அடையலாயினர்.

### பயங்கர பஸ்விபத்து

55 பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற சனிக்கிழமை கொழும்பிலிருந்து நோட்டன் பிறிட்ஜை நோக்கிச் சென்றுகொண்டிருந்த நெல்சன் மாதிரியான பஸ் ஒன்று கபெல்லவெலை எனுமிடத்திலே ஓர் மதகின் மேலாக ஓடிச்சென்று கீழே பள்ளத்தில் விழுந்துபுரண்டு விபத்துக்குள்ளானபோது, அதிலே சென்றவர்களில் பெண்களும் பிள்ளைகளும் உட்பட 48 பேர் கடூரகாயமடையவே, இவர்களில் 40 பேர் காவனெல்ல ஆஸ்பத்திரிக்கும், 8 பேர் தெலிகம ஆஸ்பத்திரிக்கும் கொண்டுபோகப்பட்டார்கள். முந்திய ஆஸ்பத்திரியிலே இருப்பவர்களில் 11 பேரின் நிலைமை மிகமோசமாயிருப்பதாகச் சொல்லப்படுகிறது. பஸ் பாடாவாரியாய்ச் சேதமுற்றது.

### வாழ்க்கைச் செலவுப்புள்ளி

இலங்கையிலே சென்ற ஆனிமாதத்தில் வாழ்க்கைச் செலவுப்புள்ளிகளின் தொகை சென்ற மாசி, பங்குனி, மாதங்களிற்போன்று 284 ஆகியிருப்பதாய்க் கண்டறியப்பட்டுள்ளது. இத்தொகை சென்ற வைகாசியிலும் ஒன்ருலே அதிகரித்திருக்கிறது. இந்த ஏற்றத்துக்குக் காரணம், அம்மாசத்திலே மீன்விலையும், மரக்கறிகளின் விலையும் அதிகரித்தமையேயாம்.

### அரிசி இறக்குமதி

மொத்தமாக 42,000 தொன் அரிசி ஏற்றிய ஆறுகப்பல்கள் கொழும்புத் துறைமுகம் வந்துசேர்ந்து சென்றவெள்ளிக்கிழமைமுதல் அரிசியை இறக்கிக்கொண்டிருக்கின்றன. இவ்வருடத்திலே இதற்குமுன் எப்போதாவது இவ்வளவு பெருந்தொகையான கப்பல்கள் ஏககாலத்தில் கொழும்புத்துறைமுகம் வந்துசேர்ந்து அரிசி இறக்கவில்லை. இந்தஅரிசி இலங்கைக்குக் குறைந்தபட்சம் நான்கு மாதங்களுக்குப் போதியதாகும். தற்போது அரிசித் தட்டுப்பாடு கிடையாதென்றும், கோதுமை, மா, சீனி ஆதியனவும் ஏராளமாய் இருப்பதாகவும் உணவுத்தலைவர் தெரிவித்திருக்கின்ருர். பயனீயர் என்ற இந்தியகப்பல் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கென்று 2,000 தொன் அரிசியுடனும், 1,000 தொன் மாவுடனும் சென்றவெள்ளிக்கிழமை கொழும்பிலிருந்து பிரயாணப்பட்டுக் காங்கேசன்துறைவந்துசேர்ந்து அவற்றை இறக்கிவருகின்றது.

### நெல்லுக்குக் கூடியவிலை

இலங்கையிலே நெல்வேளாண்மை செய்கிறவர்கள் அதிகமானநெல்லை விளைவிக்கத் தூண்டிவிடும் நோக்கமாக அரசாங்கம் அவர்களுக்குக் கொடுத்துவரும் உத்தரவாதவிலையைப் புசல் ஒன்றுக்கு 8 ரூபாவிலிருந்து 10 ரூபாவாகக் கூட்டிவிட ஆலோசிப்பதாய்த் தெரியவருகிறது. அங்ஙனம் செய்வதாலே அவர்கள் தங்கள் நெல்லை அதிகமாக அரசினருக்கேவிற்க முன்வருவார்களென்று சொல்லப்படுகிறது.

---

## ருகமக
## கொடிப்பெருநாள்

இலங்கையிலே செவிடரும் ஊமர்களுமான பிள்ளைகளுக்கென ருகமத்தில் ஸ்தாபிக்கப்பெற்று நித்தியசகாய மாதாவின்சபைக் கன்னியாஸ்திரிமாரால் நடத்தப்பட்டுவருகின்ற ஓரேயொரு கத்தோலிக்கபாடசாலைக்கு உதவியாக நடைபெறுகின்ற கொடிப்பெருநாளை இவ்வருடம் நிகழும்ஆடி மாதம் 27-ந்திகதி வெள்ளிக்கிழமை சகலபாடசாலைகளிலும், மற்றும் ஸ்தாபனங்களிலும், ஆடி 29-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை சகலகோயில்கள், சிற்ருலயங்களிலும்நடத்தவேண்டுமெனத் தீர்மானமாயிருக்கிறது. இலங்கையிலுள்ள சகலமேற்றிராசனங்களிலுமிருந்தே இப்பாடசாலை பிள்ளைகளை ஏற்றுக் கல்விபயிற்றிவருகின்றது. அதனல் சகலமேற்றிராசனங்களையுஞ் சேர்ந்த பிள்ளைகளுமே—கத்தோலிக்க பிள்ளைகள்மாத்திரமல்ல, கத்தோலிக்கர்அல்லாத ஒருதொகையான பிள்ளைகளுமே தற்போதுஅதில் கல்விபயின்றுவருகிருர்கள். அதனல் இப்பாடசாலைக்குக் கத்தோலிக்கரும், மற்றெல்லோருமே உதவிசெய்யவேண்டியவர்கள். சலார்கொடுக்கவியலாத பெற்ருேரின் பிள்ளைகள் முற்றும்இலவசமாகவே இதில் சேர்க்கப்படுகின்ருர்கள். ஏதோசொற்பசலார் கொடுக்கக்கூடிய பெற்ருேர் மிகச்சொற்பமாயிருந்தாலும் தங்களால்இயன்றதைக் கொடுக்கும்படியாகக் கேட்கப்படுகின்ருர்கள். தற்சமையம் பிள்ளைகளைத் தாபரிப்பதற்கும், அவசியந்தேவைப்படும் கட்டடங்களை அமைத்துப் பாடசாலையை விசாலமாக்குவதற்கும் நாளுக்குநாள் அதிகபணம் தேவைப்படுகிறது. அதனல் கொடிகளைவிற்றும், பிறவழிவகைகளைக் கையாடியும் தங்களாலான உதவி செய்யும்படியாக அனைவரும் வேண்டப்படுகின்ருர்கள்.

---

—கம்யூனிஸ்தசீனுவின் ஆகாயப் படைமுழுவதும் கோறியாவில் உபயோகிப்பதற்குத் தீவிரமாகக் கிடைக்கக்கூடியவகையிலே மஞ்சூரியாப்பகுதியில் நிறுத்தப்பட்டிருப்பதாகவும், மிக்—15, யாய்க் 15 என்றஇனமானஒரு தொகை ஜெற்விமானங்களும் அதில் அடங்கியிருப்பதாகவும் அமெரிக்க ஆகாயப்படை மந்திரியார் தெரிவிக்கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கத்தின் சிங்கநோக்கு

(அண்மையில், பொன்மலையில் உணவுஅமைச்சர் உயர்திரு. ரோச் விக்டோறியா அவர்கள் தலைமையில் நிகழ்ந்தகூட்டத்தில், தனிநாயக அடிகளார் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்.)

என்துறை இலக்கியத்துறை. ஆயினும், இந்தியநாட்டில் சமூகத்தொண்டு இன்னும் பல்லாயிரமடங்கு பெருக வேண்டுவது இன்றியமையாத கருமமாகஇருத்தலின், யானும் இத்துறை பற்றிப் பேசத்தலைப்பட்டேன்.

இதுபோழ்து, கத்தோலிக்கஉலகம், அர்ச். பாப்பாசர் 13-ம் சிங்கராயரின் "தொழிலாளர்சாசனம்" எனும் திருமுகத்தின் அறுபான்ஆண்டு நிறைவு விழாவினைக் கொண்டாடுகின்றது. நம் கீழ்த்திசைநாடுகளில் மக்கள்கூட்டியல் அறத்திற்கு நாம்பணியாற்றும் கடமை இருத்தலான், பரிசுத்த பாப்பாசர்கள் இத்துறைபற்றி விடுத்துள்ள திருமுகங்களை நாம் படிப்பதுடன், அவர்கள் எடுத்துக்கூறிய நீதிகளையும், கோட்பாடுகளையும் பிறர்க்குஅறிவித்துப் பரப்புவதும் நமகடமைஆகும். அரிமா என்னும் தம் பெயர்க்கொப்ப, 13-ம் சிங்கராயர் அரிமாநோக்குடன் முன்னும்பின்னும்பார்த்து, Rerum Novarum எனும் திருமுகத்தை வரைந்தார்.

இன்று தொழிலாளர்நிலைமை, மேல் நாடுகளில் ஒருவாறு சீரடைந்துள்ளது. ஆயின், 60 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் விடுத்ததிருமுகம், அவண் ஒரு பெரும்புரட்சிக்குக் காரணமாயிற்று. நம்திருமறையைச் சாராதார் பலர்தாமும் அதனைப் போற்றினர். எனினும், கத்தோலிக்கமாந்தரும், அரசியலாளரும் அன்றுமுதல் அதனைக் கடைப்பிடித்தொழுகி வந்திருப்பரேல், இன்று இவ்வுலகில் நாம் காண்கின்ற சமுதாயவாதம், சமதர்மவாதம் எனும் கொள்கைகளும், கட்சிகளும் இடம் பெற்றிருக்கமாட்டா. நாம் கத்தோலிக்கமக்கள். உலகில் 45 கோடி எண்ணினர் இருக்கின்றோம். பாப்பாசர்கள்கூறுவதை நாம்அனைவரும் சொல்லிலும், செயலிலும், வழக்கிலும் நடத்துகின்றேம் அல்லேம். நடத்துகிற்பேமாகின் உலகின்நிலைமையை ஒரு சிலநாளில் ஒருங்கே முற்றிலும் மாற்றவல்லேம்.

ஐக்கிய அமெரிக்காவின்கண் குருவாகஇருக்கும் என்நண்பர்ஒருவர், தம் சிற்றூரில்வதியும் "வறுமையுற்ற குடும்பம்" ஒன்றினைப்பார்க்க என்னை அழைத்துப்போயினர். இருபேரும் ஆங்குச் சென்றேம். அவ்வறியகுடும்பத்திற்கு 150 ஏக்கர் விளைநிலம்உளது. இரண்டு பழையமோட்டர்கார்களும், ஆடுமாடுகளும், கோழிகள்பலவும், பிறவும்உள்ளன. இஃது அமெரிக்காவில் ஒரு "வறுமையுற்ற குடும்பம்" என்பர்!

அமெரிக்காவில் தொழிலாளிகள் மாதம்ஒன்றிற்குச் சராசரி சம்பளம் ரூபா 700—800 பெறுகின்றனர். இந்தியாவில் ரூபா 20 தான். அமெரிக்கமக்கள் சராசரி 70 ஆண்டுகள் உயிர்வாழ்ந்திருக்கின்றனர். இந்தியாவில் சராசரி 30 ஆணடுகளே. அமெரிக்காவில்வாழ்கின்ற 15 கோடிமக்கள் தொகைக்கு, உலகசெல்வத்தில் நூற்றுக்கு 47 விகிதம் உரியதாகும். இந்தியாவில் 37 கோடி மக்கட்கோ, நூற்றுக்கு 4 விகிதமான செல்வமே உரியது. இந்தியாவிலே பசியாய், பிணியாய், அம்மணமாய், எழுத்தறிவின்மையாய், குருடாய், முடமாய், குட்டமாய்க்கிடந்து வருந்தும் மக்கள் தொகைக்கு ஈடான நாடு சீனம்ஒன்றே. இந்தியாவில் கத்தோலிக்கர் சமூகப் பணிஆற்றுதற்கு எல்லைஇல்லாதஇடம் உண்டு. வேற்றுநாடுகளின் உயர்ந்த வாழ்க்கை நிலையையும், நம்மக்களின் தாழ்ந்தநிலையையும் ஒப்பு நோக்கிப் பார்க்குமிடத்து. உள்ளம் துடிக்கின்றது, மனம் வாடுகின்றது. இத்துறையில் பணியாற்றுதலே நம்அனைவர்க்கும் பெருங்கடமைஆகும்.

பாப்பரசர் 13-ம் சிங்கராயரின் நிருபம் இந்தியாவில் இக்காலத்திலும் பயன்படுவதாகும். இன்னும் பல்லாண்டுகட்கும் பயன்படுத்தற்குரித்து. அவர் கூறியுள்ள குறிப்புக்கள் சிலவற்றை ஈண்டு வற்புறுத்த விரும்புகின்றேன் :—

1. மக்களை எவ்வாறு பிறர்எமாற்றிவரினும், வகுப்புவேற்றுமை என்பது உலகில் இயற்கையாக எக்காலத்தும் இருந்தேதீரும். அதனை நீக்குதல் இயலாது. ஆதலால் வகுப்புப்போர், வகுப்புப்பகை, வகுப்பு முரண்பாடு இருக்கவேண்டாம். அன்பே தொழிலாளிகளையும் முதலாளிகளையும் இணைக்கும்கருவியாக இருத்தல்வேண்டும். செல்வர்என்று ஒருவரை நாம் புகழ்வதும்இல்லை, எளியர்என்று ஒருவரைநாம் இகழ்வதும்இல்லை. இறைவன்திருமுன்னர் ஆன்மாவே பெரும் பொருள். ஆன்மாவைப் பொறுத்த அளவில், மக்கள் அனைவரும் ஒரேவகுப்பினரேஆவர். கிறிஸ்துவின் அன்பு உளதெனின், எத்துணை வகுப்புப்பிரிவுகள் இருப்பினும், அத்துணை வகுப்புப் பிரிவுகளின்ஊடேயும் அமைதி என்றும் நின்றுநிலவும். அரசியல்துறையின் பெருந்துணை திருச்சபை. அது அன்பினை அடிப்படையாக வலியுறுத்துதலால், சமூகஒற்றுமையை வளர்த்து வருகின்றது. ஆதலின், தொழிலாளி முதலாளிப் பகைமூட்டுதல் திருச்சபையின் பகைவர்செயலேஎன்க.

2. அரசியல் என்பது மக்கள் வாழ்க்கைக்கு உதவியாகவே அமைக்கப்பெற்றது. ஆதலின், அது அதற்கு இடையூறு ஆதல் கூடாது. அரசியல் தனக்கென மக்களின் பொருளியல் வாழ்க்கை உரிமைகளை அபகரித்தல் ஆகாது. தொழிலாளிகளைச் சிறப்பாகக் காப்பாற்றல்வேண்டும்.

3. ஒவ்வொருவருக்கும் பொருள் உரிமைஉளது. அவ்வுரிமையை அரசியல் மனிதர்க்குக் கொடுப்பதின்று. மனிதர் தம் இல்லத்தில் இயற்கையாகப் பொருட்களை ஈட்டவும், அவற்றைவளர்க்கவும், காக்கவும், வேறுபடுத்தவும் அவர்க்கு உரிமை உண்டு. இந்த உரிமைகளைப் பொது உடைமைஅரசியல் அபகரித்துக்கொள்கின்றது. இஃது மனிதனின் விடுதலைக்கும், சுதந்திரத்திற்கும் நேர் முரண். ஆதலின், இந்திய சோஷலிஸ்ட் கட்சியைத்தானும் கத்தோலிக்கர் ஆதரிக்கமுடியாது.

4. தொழிலாளிகளைப் படிப்படியாக அவர்கள்செய்யும் தொழில்களின் முதலீட்டில் பங்காளிகள் ஆக்கி விடுவதே, அவர்களைச் சீர்ப்படுத்தும் தலைசிறந்த முறை. அவர்க்கும், அவர் குடும்பத்தினர்க்கும் வாழ்க்கைச்செலவிற்குப் போதியஅளவான சம்பளம் கொடுத்தல்வேண்டும். அச்சம்பளத்தில், அன்னார் தம்நோய்க்கும், மூப்புக்கும், எதிர்பாரா இடர்ப்பாடுகட்கும் உதவுமாறு பொருளீட்டிவைத்தற்கும் இடம் இருத்தல்வேண்டும். ஒருவன் ஏழையாக இருத்தலால், அவனுக்குக் குறைந்தசம்பளம் கொடுப்பது நீதிக்கும், அன்பிற்கும், வாய்மைக்கும் முற்றும்முரண்பட்ட செயல்ஆகும்.


மக்கள் தாமாகவே தம்மை உயர்த்தும் வழிகாண்பதே மக்கள்கூட்டியல் அறத்தின் சிறந்தமுறை. 13-ம் சிங்கராயரின் "தொழிலாளர்நிலைமை", 11-ம் பத்திநாதரின் "நாற்பதாம் ஆண்டுவிழா", "திவ்வியமீட்பர்" எனும் இந்த மூன்று திருமுகங்களையும் முறையே படித்துணரும் கத்தோலிக்கன்எவனும் இத்துறையில் தன்னால் இயன்ற சிறுபணிஎதுவும் செய்யாதிரான். இன்று உலகிற்கு வேண்டுவன: நீதி, அன்பு, வாய்மை இவை மூன்றுமேயாம்.


கீர்த்தி வாய்ந்த

கிறவுண் மார்க் ஓடுகள்

முடி அடையாளம் பதித்த ஓடுகளையே

பாவியுங்கள்!



இவ் ஓடுகளை அழைப்பித்து விற்பவர் :

மிசெஸ் இம்மனுவேல் திருச்செல்வம்

அவர்கள் மாத்திரமே.

இன்னும் ஓட்டுக்கலவையிலே தயாரிக்கப்பட்ட இந்தியன் செங்கற்களும், தளவரிசைக் கற்களும் விற்பனைக்குண்டு.

[முன்போல் வியாபாரம் நடந்துவருகிறது.]

விலாசம்: பெரியதெரு, யாழ்ப்பாணம்.

தந்தி: திருச்செல்வம், போன் நம்பர்: 52.


## 1-ம் வருட மரண ஞாபகம்



பிறப்பு: 25—12—27  இறப்பு: 5—7—50

எனது அருமைக் குமாரரும், எங்களது நேசச் சகோதரருமான திரு. இம்மனுவேல் துரைரேத்தினம் செல்வத்துரை அவர்கள் மறைந்து இன்றோடு (5-7-51) ஓர் ஆண்டு நிறைவாகிறது.

"பாவி பயந்த மணியெட்டி லையோவெம்
ஆவித் துரைய ணைந்திட்டால்— பூவில்
துறவோ ரறவோருற் றுரைக்கெஞ் சிற்
மறவா துதவும வற்கு" [றேம்

என்றுமிரங்கி இதனைக்கண்ணுறும் சகலரையும் இவருடைய ஆத்தும இளைப்பாற்றிக்காக மன்றாடும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

"நித்திய இளைப்பாற்றியை அவருக்குக் கொடுத்தருளும் சுவாமி... சமாதானத்தில் இளைப்பாறுவாராக."

தாய்: ஸ்ரீமதி மு. செல்வத்துரை

சகோதரர்: நாகரெத்தினம், தம்பிரெத்தினம், சங். சிஸ். மேரிலுமினு (நேசரெத்தினம்), தங்கரெத்தினம், யோகரெத்திரம், சண்முகரெத்தினம், அரியரெத்தினம், இராசரெத்தினம்.

R. I. P.

## தமிழ்விழா- ... ... விரிந்தமலர்

அறிஞர்பலர் ஒன்றுகூடி எழுதிவிடுத்துள்ள தமிழ்விழாமலரைக் களிவுடன்படித்து ஆனந்தித்தேன். தமிழர்பெருமைகளை உலகறியச்செய்த அப்பெரியார்களுக்கு என்மனப்பூர்வமானநன்றி உரித்தாகுக! அம்மலரிலே "ஈழநாடும் தமிழும்" என ஓர்விடயம் பலபெரியார்களின் பிரதிமைப்படங்களுடன் வெளிவந்திருப்பது எவர்க்கும் இன்பத்தை அளிப்பதே. ஆனால், ஆங்கு சொற்கலைப்புலவர் சுவாமி. ஞானப்பிரகாசரது உருவப்படம் காட்டப்படாததுவருந்தற்பாலதே. மேலும் இவ்வரியமலர் மெய்யான தமிழ்விழாமலரல்ல. அவ்விழாஅரும்பி அருஞ்சுவைதருமுன் அதுகொய்யப்பட்டதால் அதைத் தமிழ்விழாமொட்டென்றே கூறல்வேண்டும். அதைக்கொய்துதந்த பெரியார்கள் விரிந்தமலரையும் கொய்துதரார்களோஎன்ற துணிவான நம்பிக்கையே இக்கடிதத்தை எழுதத் தூண்டிற்று.

தமிழ்விழா யாழ்நகரிற் சிறப்பாக நடைபெற்றது. எத்தனையோஅறிஞர்கள் தமிழ்மொழி தழைத்தோங்கத் தனிச்சிறப்புற்ற தமிழ்ச்சொற்பொழிவுகள் ஆற்றினார்கள். அவைகளெல்லாம் ஆங்கொன்று மிங்கொன்றுமாக ஆன்றன்றோடு பத்திரிகைகளில் ஊசலாடின. ஆனால், அவைகளைச்சிலபத்திரிகைகள் இருமடங்குபெரிதாக்கியும், சிலஅரைமடங்காக்கியும், இன்னுஞ்சில ஆங்கு கூறப்பட்டதைத் தெளிவாகவும் எடுத்துக்காட்டின. அவ்வறிஞர்களின் அரியசொற்பொழிவுகள் இவ்விதம் சிதைவுற்றிருப்பதைக்கண்டு மிகவும் வருந்துகின்றேன். இதனால் தமிழ் விழாவிற் பங்குபற்றாதபலர் பலவிததப்பபிப்பிராய முடையவர்களாக இருக்கவுங்கூடும்.

எனவே, எதிர்காலத்தில் நான்காம் விழாவில் பங்குபற்றும் தமிழ்அறிஞர்களின் அரியவிரிவுரைகள், அவர்களினதும், அதிற்பங்குபற்றிய ஏனைய அறிவாளிகளினதும் பிரதிமைப்படங்கள், தமிழ்விழாமண்டபம், (உள்ளும் புறமும்) கலைக்காட்சி சம்பந்தமான படங்கள், ஏட்டுச்சுவடிகளின் ஊர்வலம். விழாவிற்பங்குபற்றிய சனத்திரள் இவைகள்யாவும் விரிவாகஅடங்கிய மலரொன்றை ஈழநாட்டில் அரும்பச்செய்து விழாவிற்பங்குபற்றுதோர் உள்ளங்களையும், பங்குபற்றியோர்உள்ளங்களையும் எம்தமிழ் அறிஞர்கள் ஒருங்கே பூரிக்கச்செய்யவேண்டுமென்பதே எனதுவேண்டுகோளாகும். அம் [illegible] லோரின் உள்ளங்களில் [illegible] ணிபோன்று விழாவின்ஞாபகத்தை என்றும் நிலைநிறுத்துவதொன்றாகும்.

இன்னும், கிரேக்கர் முக்கியசம்பவங்களைப் பாக்களிற்புனைந்து அகமகிழ்வு கொள்வர். அப்பாக்களைத் திறமாகப் புனைபவர்க்குப் பரிசில்களும் வழங்குவர். ஆகவே, தமிழ்நாட்டிலுள்ள பல செல்வவந்தர்கள் தமிழ்விழாப் பாக்களைப் புனைபவர்க்குப் பரிசில்கள்வழங்க முன்வரல்வேண்டும். இதன்வழியாகத் தமிழ்விழாவின்ஞாபகம் எங்கள்மனதில் ஊன்றிப்பதிவதுடன் பிற்காலமக்கட்கும் அதன்ஞாபகத்தை நிலைநாட்டுமென்க.

ப. பெனடிக்ற்

அர்ச். சவேரியார்கல்லூரி,

மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவருடைய கடைசி நாட்கள்

— அழுது —

வண. செபஸ்தியான்சுவாமியாரைக் கல்லறையில் நல்லடக்கம் செய்துவிட்டுச் சனவெள்ளம் வாடியமுகத்தோடு சரிந்துகொண்டிருந்தது. அவர்உடலை வண்டியில்வைத்துக் கையால் இழுத்துக் கடைசி நன்றிக்கடன்களைமுடித்த பழையமாணவர்கள் வியாகுலமுகத்தோடு பழையசிந்தனைகளில் மனதைப் பறிகொடுத்துக்கொண்டு ஒருவர்பின் ஒருவராய்ச் சென்றுகொண்டிருந்தார்கள். சேமக்காலையின் வாசலில் நான் நின்றபொழுது, முக வாட்டத்தோடு வந்த ஒருவெள்ளைஉருவம் என்னைப் பார்த்துசசிரித்தது. நானும் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு கொஞ்சமாய்ச்சிரித்தேன்.

"அழுது! நீர் ஏன் நெடுநாட்களாகப் பத்திரிகைக்கு எழுதுகிறதில்லை?" என்று அது பேச்சைஆரம்பித்தது.

நான் மெதுவாகக் கையைப் பிசைந்துகொண்டே "நான் பிள்ளைகுட்டிக்காரன் ஐயா! பத்திரிகைக்கு எழுத ஆசையாயிருக்கிறது; ஆனால், நேரம்கிடைக்கிறதில்லை" என்றேன்.

"இல்லை; இந்தச்சாட்டுகளை ஒப்புக்கொள்ளமுடியாது. நீரும் எழுதித்தான் தீரவேண்டும்" என்று அதிகாரத்தோடுபேசியது அந்தஅன்புவடிவம்.

"ஏதோ பார்க்கிறேன்" என்று தலை அசைத்தேன். இவ்வளவு துணிவாகப் பேசியது வேறுயாருமில்லை. கத்தோலிக்க உள்ளங்கள் அதிகமாய்அறிந்த செவாலியர் எஸ். அருளானந்தம்அவர்கள்தான். இப்படியான பெரியார்களுடையவாக்கை நாம் அலட்சியம் செய்யக்கூடாதென்று இதோ எழுதுகிறேன்.

சுவாமி செபஸ்தியான்அவர்கள் இளவாலையில் நிலச்சுவாந்தாராகவும், தேவ வழிபாட்டனுசாரங்களில் சிறந்தவராகவும் இருந்த ஸ்ரீ கயித்தாம் பிள்ளையின் ஏகபுதல்வன். பாகதேவ முதலி, மண்டலசேகரமுதலி என்ற இருமரபுந்தூய குலக்கொழுந்து. இவர் தாய்தந்தையரின் செல்லப்பிள்ளையாகத் துள்ளித்தெறித்து விளையாடிவரும் நாளில், சூசைப்பிள்ளை உபாத்தியாயரிடம் ஆரம்பக்கல்விக்கு அனுப்பப்பட்டார். துர்அதிர்ஷ்டவசமாக இவரும் சுவாமி ஞானப்பிரகாசரைப்போல இளமையில் தந்தையை இழந்தார். "விளையும்பயிரை முளையிலேதெரியும்" என்ற நன்மொழிப்படி, பாலப்பிராயத்திலே செபஸ்தியானில் காணப்பட்ட சீரிய ஒழுக்கத்தையும், தேவபக்தியையும், அவர் கணிதம்முதலான பாடங்களில்காட்டிய திறமையையுங் கண்ட வண. கட்டளைச்சுவாமியார் இவரைக் குருவுக்கு இலக்குவைத்தார். அத்துடன் பெற்றதாயின் பேராவலும் ஒன்றுசேரவே மகாமேன்மைதங்கிய பொஞ்ஜீன் ஆண்டவரும், மேரிச்சுவாமியுமாய்ப் பதினொராம்வயதில் இவரைக் குருமடத்தில் சேர்த்தார்கள். தெய்வீகபூங்கரங்கள் குருமுடியை இவருக்குச்சூட்டின.

சம்பத்திரிசியார்கல்லூரியில் கல்வி பயின்றகாலையும் ஆங்கிலத்திலும், கணிதத்திலும் அவருக்கிருந்த சாமர்த்தியத்தைப் பாராட்டாத ஆசிரியர்களோ கிடையாது. சம்பத்திரிசியார் கல்லூரி அதிபரே இவரை ஒரு தங்கச்சுரங்கமென்று வாய்விட்டுச் சொன்னரென்றால் நாம் சுவாமியாருடைய மதிப்புக்கு இலங்கையின் ஏனையபாகங்களில் உரைகல்லுத்தேடுவது அவசியமில்லாமற்போகிறது.

வண. டன்சுவாமிஅவர்கள் இவரையும், காலஞ்சென்ற பிரான்சிஸ் சுவாமியாரையும் பார்த்து, "இனி நீங்கள் விரும்பும் எந்தத்துறையிலாவது அச்சமின்றிப்பிரவேசிக்கலாம். அதற்குரிய பரிபக்குவமானவல்லபம் உங்களுக்கிருக்கிறது" என்று புகழ்ந்தார். உயர்தரக்கணிதத்தில் லண்டன் சர்வகலாசாலைநடத்திய பரீட்சையில் இலங்கையில் முதற்திறமையானவராகச் சுவாமி செபஸ்தியான் தெரியப்பட்ட சம்பவத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

சிலாகிக்கத்தக்க வேலைகளைச்செய்து பேரையும் புள்ளியையும் சம்பாதிக்க வேண்டுமென்று அவர் அபிலாஷைப்படவில்லை. அதனால் அவருடைய சக்திகள் அடங்கியேகிடந்தன. ஆனாலும் கடந்த பத்துவருடங்களாக ஒரு நவீனஆராய்ச்சியில் அவர்ஈடுபட்டிருந்தார். உலகபாஷைக் கூட்டங்களெல்லாம் ஒருதாய்மொழியில்இருந்தே உற்பத்தியாகியிருக்கின்றன வென்பதை நிலைநாட்டுவதற்கு ஆங்கிலத்தில் "The Triple Key or a Primer of Basic Philology" என்ற மொழி ஆராய்ச்சிநூலைஎழுதிச் சென்றஆண்டு அச்சேற்றுவித்தார். "எல்லாரும் ஒரேமக்கள்; அவர்கள் மொழியும் ஒன்றே" என்ற சுவிசேஷ வார்த்தையுடன் இந்தஆராய்ச்சிநூல் ஆரம்பமாகிறது. இந்தநூல் லண்டன் சர்வகலாசங்கத்தாருடைய நன்மதிப்பைக் கூடப் பெற்றிருக்கிறது. இதைப் பார்த்த தனிநாயகம்அடிகள் "இது ஒருஆச்சரியமான ஆராய்ச்சிவேலை" என்று பாராட்டினர்.

மூலபாஷையைக் காணும்முயற்சியில் இதுவரையில் உலகஅந்தங்களில் உழைத்தவர்கள் மிகச் சிலரேயாவர். பரந்த ஆராய்ச்சிக்குரிய இவ்விஷயத்தைஎழுத ஜேர்மன், அங்கிளோ-சாக்சன், கிரேக்கம், லத்தீன், அறமேக், தமிழ், சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் அவர் தேர்ச்சிபெற்றுக் கொண்டார்.

சுவாமிஅவர்கள் இளவாலையில் இருந்தபோது அவருடைய நிலைமை கவலையளிப்பதாகஇருந்த கடைசி நாளில் நான் அவரிடம் சென்று, "சுவாமி, இங்கே உங்களுக்கேற்ற மருந்துகள்எடுப்பது சிரமசாத்தியமாயிருக்கிறது. வியாதியும் குறைவதாகத் தெரியவில்லை. நேற்றிரவு ஏற்பட்ட வருத்தத்தினால் நாங்கள் மனம் கலங்கிப்போனோம். யாழ்ப்பாண அரசினர் வைத்தியசாலைக்குச் சென்றால் அங்கே உங்களுக்குப்போதிய சௌகரியங்கள்கிடைக்கும். விசேஷடக்றர்மாருடைய மேற்பார்வையினால் நீங்கள் சீக்கிரமே குணமடைந்துவிடுவீர்கள். உங்கள்எண்ணம் எப்படியோ?" என்று சொன்னேன். அவர் உடனே, "அது மெய்தான். பெட்டிகளை ஆயத்தம் செய்யும்" என்றார்.

நான் அவருடைய பெட்டிகளை அடுக்கிக்கொண்டிருந்தபோது, இரண்டு பெரியநூல்களின் வெளிஅழகைக்கண்டு அவற்றில் லயித்துப் போனேன். உள்ளே புரட்டிப்பார்த்தபோது எனக்குஅறிமுகமில்லாத கோணல் வாணல் பாஷையில் அந்த நூல்கள் எழுதப்பட்டிருப்பது புலனாயிற்று. அதில்ஒன்று யப்பானிய பாஷையின் இலக்கணம். மற்றது சீனமொழியின் வரலாறு. கீழைத்தேச பாஷைகளையும் ஆராய்ந்து தமது இரண்டாவது பாகத்தை முடிக்கலாமென அவர் எண்ணியிருந்தார். ஆனால் அந்தவேலையை எதிர்காலச் சந்ததியாருக்குவிட்டு அவர் விலகிக்கொண்டார்.

(தொடரும்)

## நாஞசங்கதிகள்

—சென்ற ஐப்பசிமாசத்திலே 200 ஆகாயவிமானங்களைக் கொண்டிருந்த சீனக்கம்யூனிஸ்த ஆகாயப்பலம் தற்போது ஆயிரம்விமானங்கள்வரையில் கொண்டிருப்பதாகவும், பெருக்கம் அடைந்துள்ள இந்த ஆகாயப்பலத்தைக் கோறியயுத்தத்தில் சத்துரு பிரயோகிக்கலாமென்றும் சமீபத்தில் கோறியாசென்றுதிரும்பிய அமெரிக்க ஆகாயப்படை மந்திரியாரான திரு. தோமஸ் பின் லெற்றர் கூறுகின்றார்.

இனி ஆற்றுதென்று கைவிடப்பட்டவர்களின் தப்பாத ஆறுதலும், பாதுகாவலருமான

**அர்ச். யூதா ததேயுவின்**
**சுருக்கமான சீவியவரலாறும்**
**மற்றும் பத்தியனுசாரங்களும்**

பரிமேலர் எஸ். அருளானந்தம், K. S. G.
அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

பிரதி விலை சதம் 25. தபாற்கூலி பிரத்தியேகம்

கிடைக்கும் இடங்கள்:
அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை, யாழ்ப்பாணம்.
கத்தோலிக்க புத்தகசாலை
அர்ச். பிலிப்புநேரியார் கோவில், புறக்கோட்டை.

## செபமாலைமாதா கூட்டத்திருநாள்

ஊற்றுவாயன்குளம், கத்தோலிக்கமாதரின் செபமாலைமாதா கூட்டத்திருநாள் 16-6-51 சனிக்கிழமையிற் பகல் வேஸ்பருடன் ஆரம்பமாகி மறுநாட்காலை திவ்வியபூசையுடனும், சுற்றுப்பிரகாரத்துடனும் முடிவாகியது. இக்கூட்டம் வண. M. J. மரியாம்பிள்ளைசுவாமி யவர்களால் 1950-ம் ஆண்டு மாசிமாதம் ஸ்தாபிக்கப்பெற்று முதலாண்டுகிழைவுவிழா அவராதனதிர் பாராதமாற்றங் காரணமாகப் பின்போடப்பட்டிருந்து, தற்போதைய கட்டளைக்குரவரான வண. F. றேனட் சுவாமியவர்களின்வரவோடு கொண்டாடப்படலாயிற்று. சனிக்கிழமை மாலை செபமாலையின்பின் வண. கட்டளைக்குரவர் செபமாலைப்பத்தி தேவதாயாருக்கு மிகுந்தசந்தோஷம் அளிப்பதாகும்; அதனால் குடும்பங்களுக்காக மாத்திரமல்ல, உலகிலுள்ள பாவிகளுக்காகவும், உத்தரிக்கிறஸ்தலத்தில் வேதனைப்படும் ஆத்துமாக்களுக்காகவும் செபமாலையோதிவரவேண்டும்; அப்போது தேவதாயார் திருக்குமாரனிடம்மன்றாடி ஏராளமான வரப்பிரசாதங்களைப் பொழிந்தருளுவார்என்பதாக அரியதோர்பிரசங்கஞ் செய்து, அவர்கள் இத்திருநாளைக் கொண்டாடி மாதாவின்மட்டில் தங்களுக்குள்ள பக்திபற்றுதலைப் புறத்தடையாளத்தாற் காட்டியிருப்பதாகக்கூறி வேஸ்பர்பாடிச் சற்பிரசாத ஆசீர்வாதம்அருளினர். மறுநாட்காலை 9 மணிக்கு ஊர்காவற்றுறைக் கன்னியர்மடத்துத் தலைவியவர்கள் மனம்வைத்துச் சிறப்பாகச்செய்த கூட்டக்கொடியும், உத்தரியங்களும் கட்டளைக்குரவரால் ஆசீர்வதித்து அங்கத்தவரிடம் ஒப்படைக்கப்பட்டன. அதன்மேல்அவர்களின்சந்திப்பு நடந்தேறியது. பிறவூர்களிலிருந்தும்பெருந்திரளானோர் திருநாளுக்குச் சமுகமாயிருந்தனர். பூசைவேளை ஒன்பது பிள்ளைகள் முதல்நன்மைபெற்றுக் கொண்டனர். பூசைமுடிவில் மலர்கள்கொண்டுஅலங்கரிக்கப்பெற்ற கேடயத்திலே மாதாவின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் பக்தியாய் நிகழ்ந்தது. அவ்வேளை தேனினுமினிய பாமாலையும், செவிக்கினியசெபமாலையும்யாவர்க்கும் பக்திப்பரவசம் உண்டுபண்ணின.

— நிருபர்

மாந்தை — லூர்துகெபி

## நற்கருணைத் திருநாள்

மருதமடுச் செபமாலைநாயகியின் பூர்வீகதலமாகிய மாந்தைப்பதியிலே நவமாகநிறுவப்பட்டுச் சென்றஆண்டு வைகாசிமாசம் எமதுமேற்றிராணி ஆண்டவராலே ஆசீர்வதித்துத் திறந்து வைக்கப்பெற்ற லூர்துகெபியில் நிகழும்ஆடிமாதம் 20-ந்திகதியன்று திவ்வியநற்கருணைத்திருநாள் கொண்டாடப்படவிருப்பது மிகவும் சந்தோஷம் தரும் ஓர்சுபசெய்தியாகும். இதனை மிகுந்த பக்திச்சிறப்புடன் கொண்டாடும்நோக்கமாக எம்புதியகட்டளைக்குரவர் வண. எஸ். வேந்தர்கோன் சுவாமியவர்கள்தலைமையிலே அடம்பன் விசாரணைப்பங்கைச்சேர்ந்த ஆசிரியர்களுக்கும், கோவில்கட்டளைகாரர், கிறீஸ்தவர்களுக்கும் பிரத்தியேகமான கூட்டங்கள் மிகவும்விமரிசையாக நடைபெற்றுவருகின்றன. அக்கூட்டங்களிலே நிகழும்ஆடிமாசம் 20-ந்திகதி நற்கருணைவிழா மிகுபத்திச்சிறப்புடன் நடத்தப்படவேண்டுமென்றும், அதற்குரியசெலவுக்கென இவ்விசாரணைப்பங்குக் கோவில்களைச்சேர்ந்த கத்தோலிக்கமக்களும் (விடத்தல்தீவும் உட்பட) குறிக்கப்பட்டபணத்தொகையைக் கூடியசீக்கிரம் அடம்பன் கட்டளைச்சுவாமியாரிடம் கொடுக்க வேண்டுமென்றும், தேவநற்கருணைச் சுற்றுப்பிரகாரம் இரவிலே மெழுகுவர்த்தித் தீபஅலங்காரத்துடன் நடைபெறவேண்டுமென்றும், பொதுவிலே திருக்கெபித் திறப்புவிழாவின்போது காணப்பெற்ற அலங்காரமும் பக்திமுயற்சிகளும் காணப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயமாக மாதோட்டம், மன்னார்ப்பகுதிக் கத்தோலிக்கமக்களும் அபிமானத்துடன் ஒத்துழைக்க முன்வருவார்களாக. (நாட்டுத்தூதன்)

—பரிசுத்தஸ்தானத்தினிடமாக இந்தியபிரதிநிதியாயிருந்து காலஞ்சென்ற டிறூஜலால் புலாபாய் தேசாய் அவர்களிடமாக ஓர்தென்னிந்திய பிராமணரான திரு. இராகவன்அவர்கள் வத்திக்கானிலே புதியஇந்திய பிரதிநிதியாக நியமனஞ்செய்யப்பெற்றிருக்கின்றார்.

—இரும்புத்திரைநாடுகளில் ஒன்றாகிய ரூமேனியாவிலே ஒறேடியா மேயர்நகர் மேற்றிராணியாரான பிறென்ரியூஆண்டவர் சிறைச்சாலையில் இறந்துவிட்டாரென வத்திக்கானில் செய்திகிடைத்திருக்கிறது. இவர் ரூமேனியாவின் கம்யூனிஸ்த அரசாங்கத்தாலே 1948-ம்ஆண்டு கார்த்திகை மாதம் சிறைவைக்கப்பட்டிருந்தார். "வேதத்துக்காகச் சிறைவைக்கப்பட்டார்" என்றே வத்திக்கானின் வருடாந்த புத்தகம்தெரிவிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## THE CEYLON GOVERNMENT RAILWAY.

### Level Crossing Repairs.

The undernoted Level Crossings will be under repairs and closed for vehicular traffic as indicated:

| Railway Mileage Mls. Chs. | Road Mileage. | Between Stations | Date & Period of Blockage for vehicular traffic | Remarks |
|---|---|---|---|---|
| 23. 23 Chains Chilaw Line. | St. Joseph's Street 1 mile from Negombo Town. | Katunayaka & Negombo | Wednesday 11-7-51. 12-1 a. m. to 3 a. m. 3 a. m. to 6 a. m. | (Partial closure) (Total closure) Traffic could be divered via Tammitha Road, Taladuwa Road, Green Road & Main Street, Negombo. |
| 31. 41½. Main Line. | Giriulla—Pasyala Road 6⅜ miles from Giriulla. | Mirigama & Ambepussa | Sunday, 15-7-51. 6-0 a. m. to 6-0 p. m. | During the period of blockage, traffic can use the temporary Level Crossing provided. |
| 73. 10. Coast Line. | Galle—Badegama Road 1 mile 3 chains 50 L. | Galle & Talpe | Sunday, 15-7-51. from 10-0 p.m. to 3 0 a.m. (Monday, 16-7-51) | (Total closure) Traffic will be assisted over the Crossing subject to little delay. |
| 2. 24. Coast Line. | Bridge Street Road leading from Union Place Junction. | Colombo Fort & Slave Island | Saturday, 21-7-51. 6-0 p.m. to 12-0 midnight. 12-0 midnight to 6-0 a.m. (Sunday, 22-7-51) | (Partial closure) (Total closure) Traffic could be diverted through Shorts Rd., Parsons Road, via Fort and Ingram Road. |

## சிரிப்பின் இரகசியம்

இல்வாழ்க்கைபற்றிய இரகசியங்களும் மர்மங்களும் இக்காலத்தில் ஏராளமாக வெளியாகிக்கொண்டிருக்கின்றன. ஆனால், அவற்றுளெல்லாம் மகாப் பெரிய இரகசியத்தை நான் இங்கே இலவசமாக வெளியிடுகிறேன். இவ்வாழ்க்கையை இன்பமயமாக்கும் இரகசியத்தத்துவம் சிரிப்பேயாகும். இல்லறத்திலே சந்தோஷம் வேண்டுமானால் சிரிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் என்று நான் சொல்லுவேன்.

ஐயோ! பெண்களும் சிரிக்கலாமா? குடிகெட்டுப்போகுமே! என்று சிலர் பதறிக்கேட்பார்கள் என்பதை நான் அறிவேன். திரௌபதி சிரித்ததால் பாரதப்போர் மூண்டவரலாற்றையும் நான் அறிவேன். ஆனால், அதிலிருந்து நான் கொள்ளும் படிப்பினை வேறு. உண்மையிலே, திரௌபதி சிரித்ததனால் பாரதப்போர் மூளவேயில்லை. துரியோதனன் நகைச்சுவையற்றவனாய், சிரிக்கத்தெரியாதவனாய் இருந்ததனால் வந்தவினை அது. அண்ணி சிரித்தபோது துரியோதனனும்கூடச் சிரித்திருந்தால் ஒருதொல்லையும் நேர்ந்திராது. அவன் குடும்பத்தோடு அழிந்திருக்கமாட்டான். குற்றமற்ற பலர் சேர்ந்திருக்கமாட்டார்கள். ஆகையால், பாரதக்கதையிலிருந்து வெளியாகும் பிடிப்பினை என்னவென்றால், சிரிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் என்பதே.

"சிரிக்கவேண்டும்என்று சுலபமாகச் சொல்லிவிடலாம். ஆனால், சிரிப்பு எப்படி ஐயா வரும்? குடும்பமோ பெரிது. குழந்தைகள் நாலைந்து. வருமானம் சொற்பம். சாமான்கள் கிராக்கி. காரியாலயத்தில் எசமானன் படுத்தும்பாடு கொஞ்சமல்ல. இவ்வளவு இலட்சணத்தில் எதைப்பார்த்துச் சிரிப்பது? சிரிப்பு எப்படி வரும்? ......" என்ற கேள்விகள் அடுக்கடுக்காக எழுகின்றன. உண்மை என்னவென்றால், சிரிப்பதற்கான காரியங்கள் நம்மைச் சுற்றிலும் எவ்வளவோ நிகழ்கின்றன. சிரிக்கும் மனப்பான்மைதான் நமக்கு இல்லை.

நகைச்சுவையுள்ள மனிதனுக்குச் சிரிப்பு எங்குமே காத்துக்கொண்டிருக்கிறது. அது நமது வீட்டுக்குள்ளே இருக்கிறது. வீட்டுக்கு வெளியே இருக்கிறது. தன்னிடமே இருக்கிறது. நகைச்சுவையற்ற மனிதன் எரிந்துவிழுந்து மூளைக்கொதிப்புக்கண்டு தவிப்பதற்கான சந்தர்ப்பங்களிலே, நகைச்சுவையுள்ளவன் குலுங்கச் சிரிப்பதற்கே காரணங்கண்டுகொள்ளுகிறான். பெண்களுக்கும் இது பொருந்தும்.

மனைவி குழம்புக்கு உப்புப்போட மறந்துவிடுகிறாள். நகைச்சுவையுள்ள கணவன் மனைவியைக் கேலிசெய்து இருவரும் சேர்ந்துசிரிக்க அதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்துகிறான். நகைச்சுவையற்றவனோ எரிந்துவிழுகிறான். அன்று முழுவதும் இருவரும் காட்டுப்பூனைகளைப்போல கடுகடுவென்றிருக்கிறார்கள்.

மனைவிகூறிய ஏதோஒன்றைக் கணவன் வாங்கிக்கொண்டு வரவில்லை. நகைச்சுவையுள்ள மனைவியானால் கணவனின் அபாரஞாபகசக்தியைப் புகழ்ந்து சிரிப்பு மூட்டுகிறாள். தானும் சிரிக்கிறாள். நகைச்சுவையற்றவளோ சண்டைவளர்த்து அன்றிரவு இருவருக்கும் தூக்கமில்லாமல்செய்துவிடுகிறாள்.

காரியாலயத்திலே எசமான் அகாரணமாகக் கோபித்துக்கொள்ளுகிறான். நகைச்சுவையுள்ள மனிதன் அவனது அற்பத்தனமான இறுமாப்பைநினைந்து மனதிற்குள் சிரித்துக்கொள்வதுடன், வீட்டுக்கு வரும்போது அதனை மறந்துவிட்டு வருகிறான். நகைச்சுவையற்றவனே அதன் பொருட்டுத் தன்உள்ளத்தைப் புண்படுத்திக்கொள்வதுடன், வீட்டுக்கும் அந்தக்கவலையைச் சுமந்துகொண்டு வருகிறான். மனைவியின் அன்புமொழிகளையும், குழந்தையின் மழலைச் சொற்களையும்கேட்டு இன்புறாமல் அவன் எரிந்துவிழுந்து, வீட்டிலும் இன்பமில்லாமல் செய்கிறான். அழுமூஞ்சிகளும், சிடுமூஞ்சிகளும் இவ்வுலகில் எந்தத்துறையிலுமே நூற்றுக்கு 90 பங்கு ஜெயமுறுவதில்லை. இல்வாழ்க்கையிலோ அவர்கள் நூற்றுக்கு 100 பங்கும் தோல்வியே யடைகின்றார்கள்.

## சுதேச வர்த்தமானம்

### தமிழும் சிங்களமும்

பொதுக்கிளேறிக்கல் பரீட்சையைச் சேர்ந்த நிர்வாககிளேறிக்கல் வகுப்பின் இரண்டாவது பிரிவுக்கு உத்தியோக பதவியில் உயர்ச்சிபெறுவதற்கான பரீட்சைக்குச் செல்லுகிறவர்கள் அடுத்தவருடமுதல் சிங்களத்தில் அல்லது தமிழில் பரீட்சிக்கப்படவிருக்கின்றார்கள். 1952-ம்ஆண்டு ஐப்பசி மாதம் நடக்கவிருக்கும் பரீட்சையை ஆரம்பமாகக்கொண்டு அதிலே திரும்பவும் சுவபாஷைகள் புகுத்தப்பட வேண்டுமென்ற தீர்மானம் இத்தாலே நிறைவேற்றப்படவிருக்கிறது.

### ஆற்றுப்பெரிய அணைக்கட்டுகள்

மாத்தளைப் பிரிவிலுள்ள நாலந்தை ஓயா ஆற்றிற்குக்குறுக்காக 400 அடி நீளமும், 120 அடி உயரமுமான கொங்கிறீற் அணைக்கட்டு ஒன்றும், நாலந்தைஓயாவிலிருந்து மகாவலிகங்கையின் பிரதான கிளையாகிய அம்பன் கங்கைவரையும் 60 அடி உயரமான கொங்கிறீற் அணைக்கட்டு ஒன்றும் அமைக்கும்வேலை ஆரம்பமாயிருக்கிறது. வடமத்திய மாகாணத்திலுள்ள கலவீவாக் குளத்துக்குக் கிரமமாகவும், இடையறாமலும் தண்ணீர் உதவுதற்கும், அம்மாகாணத்திலுள்ள பிரதம நீர்ப்பாய்ச்சற் குளமாகிய இது, மழை பெய்யாத காரணமாக அடிக்கடி வற்றிப் போவதைத் தடுத்து வைப்பதற்குமாகவே இந்த அணைக்கட்டுகள் இரண்டும் அமைக்கப்படுகின்றன. இவைகளுக்கு ஏற்படவிருக்கும் செலவு 35,85,000 ரூபாவாகும். இவற்றை அமைக்கும் வேலை அடுத்தவருடத்தில் முடியும் போல் இருக்கிறது.

### நூதனபஸ்விபத்து

வடமேற்குப் பஸ்கம்பெனியைச் சேர்ந்த பஸ்ஒன்று சென்ற 26-ந்திகதி செவ்வாய்க்கிழமை காலை குருநாகலிலிருந்து மூன்றுமைல் தூரத்தில் எதிரேவந்த பஸ்ஒன்றுக்கு வழிவிலகிக் கொடுக்கமுயன்றபோது வீதியைவிட்டு விலகிப் பக்கத்திலிருந்த ஓர் தந்தித் தூணில்போய் மோதுண்டபோது, அத்தந்தித்தூண் அடிபாறிச்சரிந்து அங்கு கானிலே புல்மேய்ந்துகொண்டிருந்த ஓர் எருதின் மீதும், அதனை மேய்த்துநின்ற ஓர் பெண்மீதும் அடித்துக்கொண்டுவிழவே, எருது அவ்விடத்திலேயே இறந்தது. பெண் குருநாகல் ஆஸ்பத்திரியில் பிந்தஇறந்துபோயினள்.

## ORDER NISI

IN THE DISTRICT COURT OF JAFFNA

In the matter of the estate and effects of Arunasalam Velupillai of Karainagar late of Serembau in F. M. S.

Deceased

Testamentary Jurisdiction } No. 1321

Rasammah, widow of Arunasalam Velupillai of Payaricoodal, Karainagar

Petitioner

Vs.

Minor 1. Velupillai Arasaretnam
„ 2. Amirthammah, daughter of Velupillai
„ 3. Velupillai Tharmaretnam
4. Arunasalam Kanapathipillai all of Karainagar

Respondents

This matter coming on for disposal before V. S. Jeyawickrama Esquire, District Judge, Jaffna, on the 29th day of May 1951 in the presence of Mr. P. Casippillai, Proctor on the part of the petitioner and the affidavit of the petitioner dated 25th May 1951 having been read:

It is ordered that the abovenamed 4th respondent be appointed as guardian-ad-litem over the minors the 1st, 2nd and 3rd respondents abovenamed and the petitioner abovenamed be declared entitled to have Letters of Administration over the estate of the abovenamed deceased and the same issued to her accordingly unless the respondents or others interested shall on or before the 13th day of July 1951 appear before this Court and show sufficient cause to the satisfaction of this Court to the contrary.

And it is further ordered that the abovenamed 4th respondent do produce the said minors in Court on the said date.

This 29th day of May 1951.

(Sgd.) V. S. JEYAWICKRAMA,
District Judge.


புதினம்! புதினம்!

# டயறம்ஸில்

வருடத்தின்

# மத்தியகால விற்பனை

## இன்னும் ஜூலை 10-ந் திகதி வரை

நீடிக்கப்பட்டிருக்கிறது.

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்கி மேலும் பத்து நாட்களுக்கு எமது விற்பனை நீடிக்கப்பட்டிருக்கிறது.

## இத்தருணத்தை இழந்துவிடாதீர்கள்

50 பெறுறிஸ் சேலைகள்

வழக்கமான விலையிலிருந்து அரைவாசி குறைக்கப்பட்டிருக்கின்றன.

பெங்கால சேலைகளுக்குக்

கால்வாசி குறைக்கப்பட்டிருக்கின்றன.

கனவல்ல ——— இது நனவு.

## இனம்!

ரூ. 100/-க்கு மேல் சாமான் வாங்குபவருக்குத் தங்க மயமான அழகான பவுண்டன்பேனை ஒன்று இனமாகக் கொடுக்கப்படும்.

கூட்டத்தைப் பின்பற்றுங்கள்.

# டயறம்ஸ் மாளிகை

புடவைகளுக்குக் கியாதிபெற்றவர்கள்

54/60, பெரியதெரு, யாழ்ப்பாணம்.


Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 5 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org